வலை ரூபா 1–50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆவணி 15 ஜ்முஹரம் 5 இதழ் 185

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 31-8-1987

★ இலங்கை-இந்திய ஒப்பந்த மிறல்கள்:

## இன்று யாழ். வரும் அமெரிக்க குழு முன்

## செயலக வாசலில் மறியல் போராட்டம்

### வடக்கு–கிழக்கு பொதுஸ்தாபனங்கள் ஏற்பாடு

[அலுவலக நிருபர் என். கே. துரைசிங்கம்]

இந்திய-இலங்கை உடன்படிக்கையை இலங்கை அரசு சரியான முறையில் அமுல் செய்யாது அதற்குமாருக தமிழ் மக்கள் பாரம்பரியமாகவாழும் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத்தையும் மற்றும் தமிழர் விரோத நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதை இன்று யாழ்ப்பாணம் வரும் இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவராலயஉயர் அதிகாரிகள் குழுவுக்கு உணர்த்தும் முகமாக யாழ்.அரசாங்கசெயலக வாசலில் மறியல் போராட்டமொன்றைவடக்கு,கிழக்கு பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் நடத்தவுள்ளனரென தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவம்பற்றி தெரிய வந்துள்ளதாவது;

அமெரிக்க தூதுவராலய உயர்அதிகாரிகளைக் கொண்ட

(11ம் பக்கம் பார்க்க)

### கூடுதல் தமிழ் பேசும் கான்ஸ்டபிள்களுக்கென

# வடக்கு, கிழக்குப்பகுதிகளில் பொலிஸ் பயிற்சிக்கல்லூரிகள்

## மேலதிக பொலிஸ் நிலையங்களும் திறக்கப்படும்

(நமது நிருபர் எம். வாமதேவன்)

**கான்ஸ்டபிள் தரத்தில்சேரும் தமிழ், முஸ்லிம் பொலிஸாருக்கான பொலிஸ் பயிற்சிக்கல்லூரிகள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிறுவப்படவுள்ளன இக்கல்லூரிகள்மூலம் கூடுதலான தமிழ் பேசும் பொலிஸ்கான்டபிள்கள் சேவைக்கு அமர்த்தப்படவுள்ளனர். அத்துடன் வடக்கு-கிழக்கில் முன்பிருந்ததைவிட மேலும் அதிகளவு பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படவுள்ளன என்று பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் அறிவித்துள்ளன**

பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் தரத்துக்குக் கீழ்ப்பட்ட கான்ஸ்டபிள் சேவையில் சேர முன்வரும் தமிழ், முஸ்லிம், இளைஞர்களுக்கே வடக்குகிழக்கில் அமைக்கப்படவுள்ள பொலிஸ் பயிற்கிக் கல்லூரிகளில் பயிற்சிவழங்கப்படவுள்ளன.

இதுவரை காலமும் களுத்துறையில்வைத்தே பொலிஸாருக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன ஆனல் புதிய நடைமுறையின்கீழ் தமிழ் பொலிஸ் பயிற்சிமாணவர்களுக்கு வடக்கு கிழக்கில் பயிற்சி அளிக்கப்படும்.

கான்ஸ்டபிள் தரத்திற்கு மேற்பட்டோருக்கு மட்டுமே தென்னிலங்கையில் பயிற்சியளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தறபோதுஇலங்கை பொலிஸ் சேவையில் 600 தமிழ் பொலிஸார்மட்டுமே கடமையாற்றுகின்றனர்

1983ம் ஆண்டுக்கு முன்னர் சுமார் ஆயிரம்பேர்வரை தமிழ்ப் பொலிஸார் இருந்தனர். நாட்டின்சீரற்ற நிலைமை காரணமாக இவர்களில் பலர் சேவையிலிருந்தும் விலகியிருந்தனரென்றும் அறிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கில் பொலிஸ் பயிற்சி நெறிகளில் இப்பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் இளைஞர்களுக்கு கூடுதல் வாய்ப்பளிக்கப்படவுள்ள

(11ம் பக்கம் பார்க்க)

இராணுவ நடவடிக்கைகள்:

## யாழ். அபிவிருத்தி சபைக்கு ஏழரைக்கோடி ரூபா நஷ்டம்

[பருத்தித்துறை]

வடபகுதியில் இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளினுல் யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபைக்கு ஏழரைக் கோடி ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் 54 உப அலுவலகப் பகுதிகளிலும் இராணுவ நடவடிக்கைகளினுல் ஏற்பட்ட சேதங்கள்பற்றித் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் மூலமே இந்த நஷ்டம்பற்றிய கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(11ம் பக்கம் பார்க்க)

## மின்தறி நெசவு ஆலைக்கு

தேவைப்படும் எல்லாவிதமான

உதிரிப்பாகங்கள் எம்மிடம்

மொத்தமாகவும்

சில்லறையாகவும்

பெற்றுக் கொள்ளலாம்.

**PATHMA TRADE CENTRE**

111 A, BANKSHALL STREET,
COLOMBO–11.

T. P. 27137 549740.

சி-0720

## யாழ்ப்பாணத்தில் த. வி. கூ. பொதுச்சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச் சபைக் கூட்டம் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

கடந்த நன்கு ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் த. வி. கூட்டணி தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள். (ஒ)

## செல்வச்சந்நிதி புனருத்தாரண வேலைகள் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

தொண்டமானுறு செல்வச் சந்நிதி ஆலய புனருத்தாரண வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்புனருத்தாரண வேலைகளை ஆலயப் பிரதமகுரு திரு.

[11ம் பக்கம் பார்க்க]

## "இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு வடக்கு-கிழக்கு மக்கள் ஒத்துழைப்பு!"-சென்னையில் இரா.

[புதுடில்லி]

"இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் பெரும்பாலான வடக்கு, கிழக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்குகிருர்கள்" என்று இலங்கை இந்து கலாசார அபிவிருத்தி அமைச்சர் திரு செ. இராசதுரை நேற்று சென்னையில் தெரிவித்தார்.

அமைச்சர் திரு. செ.இராசதுரை அங்கு மேலும் தெரிவித்திருப்பதாவது:

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிக

12ம் பக்கம் பார்க்க)

இயந்திரக் கோளாறு

## இலங்கை அகதிகள் படகு நெடுந்தீவில் கரை ஒதுங்கியது

(நெடுந்தீவு)

இந்தியாவில் இருந்துதிரும்பி வந்துகொண்டிருந்த யாழ்ப்பாணப்பகுதி அகதிகளின்படகு ஒன்று பழுதடைந்தமையால் கொந்தளிக்கும் நடுக்கடலில் பலமணிநேரம் தத்தளித்து நெடுந்தீவு மேற்கு பனங்காணி கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளது.

இதுபற்றி தெரிய வருவதாவது: கடந்த செய்வாய்க்கிழமை இரவு மண்டபம் முகாமில் இருந்து குருநகர் நோக்கி

(11ம் பக்கம் பார்க்க)

## இந்தியா கொண்டு செல்லப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

வவனியாவில் இடம்பெற்ற விபத்தொன்றில் காயமடைந்த 'முரசொலி' அலுவலக நிருபர் இ. பாரதி [20 வயது] வைத்திய சிகிச்சைக்காக நேற்று இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்டார்.

## இலங்கைவங்கி யாழ். கிளை பணப்புழக்கம் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ் இலங்கை வங்கிக் கிளை தனது வாடிக்கையாளர்களுக்கான பணக கொடுக்கல் வாங்கல்களை இன்றுமுதல் ஆரம்

(11ம் பக்கம் பார்க்க)

## போலியோ மூளைக்காய்ச்சல் இரு குழந்தைகள் பலி

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் பரவி வரும் போலியோ, மூளைக் காய்ச்சல்போன்ற நோய்களினுல் நேற்று முன்தினமிரவும் இரு குழந்தைகள் யாழ்ஆஸ்பத்திரியில் மரணமாயினர்.

போலியோவினுல் குருநகரைச் சேர்ந்த புஷ்பராசா மௌடீனு என்ற ஒரு வயதுக் குழந்தையும், மூளைக் காய்ச்சலினுல் புங்குடுதீவைச் சேர்ந்த விவேகானந்தன் சிவப்பிரசாத் என்ற ஒன்றரை வயதுக் குழந்தையுமே மரணமானவர்களாவர். (கு)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பற்றி சார்ச்சர் 12V- 24-V உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி 0670)

நல்ல நிலைமையிலுள்ள Kawasaki/GTO மோட்டார் சைக்கிளொன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: 98, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [சி-0743]

லவ்பேட்ஸ் குருவிகள் கூட்டுடன் விற்பனைக்குண்டு. V. சுரேஸ், 39/10, புதுவீதி, கொய்யா தோட்டம், யாழ்ப்பாணம். சி-0766

இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. ஒரு கோழி 60/- தொடர்பு கொள்க: பொ. சொர்ணலிங்கம், 48/3, 1-ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-0725]

இருபாலையில் குட்டுன்னி அரசடி வீதியில் 34 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (கோப்பாய் தெற்கு அரசாங்க வீடமைப்புத்திட்டத்திற்கு அண்மையில்) தொடர்பு: New No. 116, Navalar Road, Jaffna. [சி-0762]

திருமண பட்டுப்புடவைகள் காஞ்சிபுரம், ½X½, சில்க் அன்சிபோன், கொட்டன், காஞ்சிபுரம் போன்ற நவீன சேலை வகைகளை பெற்றுக்கொள்ள: அரஸ் ஜவுளியகம், 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. சி-0130

கிளிநொச்சி கண்டி வீதியில் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் 17 அடி அகலம், 90 அடி நீளம் கொண்ட கடைக் கட்டிடம் காலியான நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு C/o ஈழநாடு. வி. என். C/A No- 0775 சி-0755

யாழ். பருத்தித்துறைவீதியில் நெல்லியடி சந்திக்கு அண்மையிலுள்ள நன்னீர்க் கிணற்றுடன் கூடிய 4 பரப்பு வீடு கட்டக்கூடிய நிலையிலுள்ள தோட்டக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்க: திருமதி மகேஸ்வரி வேலுப்பிள்ளை, பண்டிதவாசா, பழைய ஆஸ்பத்திரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி. சி-0764

30, 31 திகதிகளில் குஞ்சு விநியோகம் Hy-Line கறுப்பு-வெள்ளை பேட்டுக் குஞ்சுகள். புறொயிலர், Bairaha Farm's, Hi-Sex பேடு, புறொயிலர். வெள்ளை, சிவப்பு, கறுப்புப் புள்ளி சேவற்குஞ்சுகள். ஒரு மாதம், ஒரு கிழமை, ஒரு நாள். இவைகள் நாளை விநியோகிக்கப்படும். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. வினோத் போட்டோ, 45, புங்கன்குளம் றோட், யாழ்ப்பாணம். பிரியா ஏஜென்ஸி, 21, ஈச்சமோட்டை, கடற்கரை வீதி. [சி-0736]

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் பெரியஹோல் செற்றிகள், அல்மாரி கட்டில் மெத்தைகள், Formica சாப்பாடு மேசை கதிரைகள், பிளாஸ்ரிக் கதிரைகள், சோகேஸ், கண்ணாடி மேசைகள், Nursery கபேட், கடை சோகேஸ், கேக் மிக்சர்-National Maulinex மிக்சர் செற், Stand Fan Battery சார்ச்சர், Chopper சைக்கிள், Baby Cot மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு- M. தியாகராஜன் 326, பிரதான வீதி யாழ்ப்பாணம். (சி 0669)

## விற்பனைக்கு

கன்றுடன் பசுமாடு விற்பனைக்குண்டு. J C இனத்தைச் சேர்ந்தது. 14 போத்தல் பால் கறக்கக் கூடியது. N. சிவநாதன், 51, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி (சி- 0753)

2½ பரப்புக் காணி சகல வசதிகளுடன் உள்ள வீட்டுடன், புளியடிச் சந்தை ஒழுங்கை மானிப்பாய் தெருகில விற்பனைக்குண்டு. தொடர்பு: இ தர்மராசா, புளியடிச்சந்தை ஒழுங்கை, மானிப்பாய். (சி- 0760)

## தேவை

பிடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 0748, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-0748]

தேயிலை பக்கட்டில் அடைப்பதற்கு அனுபவமுள்ள பெண்கள் உடனே தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 0747, மே/ பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-0747)

சிங்கப்பூரில் பணிப்பெண்ணாக வேலைசெய்ய பெண்கள் இருவர் தேவை. நேரில் பாஸ்போட்டுடனும் 6 படங்களுடனும் உடனடியாக வரவும். துரைசிங்கம், 376B, நாவலர் வீதி, அரியாலை. சி-0763

கோழிப்பண்ணைக்கு வேலை ஆட்கள் தேவை. தொடர்பு: சீமாட்டி, 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் [சி 0657]

யாழ். நவீன சந்தையில் 8ம் இலக்கத்தில் உள்ள ராஜா ரெயிலர் கடைக்கு தையல் வேலைக்கு பெண்கள் தேவை விரும்பியவர்கள் நேரில் வரவும். [சி 0756]

## சேவை

காலை முதல் மாலைவரை தங்களுடைய சகல பத்திரங்களையும உடனுக்குடன் போட்டோஸ்ரற் செய்துகொள்ள நாடுங்கள். மச்மிலன் புத்தகசாலை, No-3 பஸ் நிலையம், ஆஸ்பத்துரி வீதி, யாழ்ப்பாணம. சி-0752

Transformer, மோட்டர், மின் விசிறி, கிறைண்டர் சகல றீவைண்டிங் வேலைகளும் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். Omega, Manipay Road, Jaffna (சி-0666)

## வகுப்புக்கள்

க பொ. த. (உயர்) 88 கலை, வர்த்தகஓராண்டு வகுப்புக்கள் ஆரம்பம் 29- 08- 87 சனி மாலை 3 மணி. மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. (சி-0676)

20-09-87 நடைபெறவிருக்கும் யாழ் சர்வகலாசாலை கொம்பியூட்டர் பயிற்சி நுழைவுப் பயிற்சிக்கான உளச்சார்புப் பரீட்சைவகுப்புக்கள் 31-08-87 காலை 9-00 மணி தொடக்கம் தினமும் நடைபெறும். Science Centre, Karaveddy. சி-0677

## வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனைகள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ள கனகசபை தர்மகுலசிங்கம், கருங்காலி, காரை நகர். 190/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சி-0723

## வகுப்புக்கள்

G. C. E. [O/L] டிசம்பர் ஆங்கிலத்திற்கான துரிதமீட்டல் A/L, பல்கலைக்கழக மாணவர், தொழிலாளருக்கான எழுதப் பேச தரமான குறுகியகால ஆங்கிலம். போதனாசிரியர்: ஆசிரிய கலாசாலை முன்னாள் ஆங்கில விரிவுரையாளர் திணைக்கள ஆங்கிலப் பரீட்சகர் கயிலாயநாதன் GAQ விரிவுரைள் கலாநிலையம், மாவடி, வட்டுக்கோட்டை, பிள்ளையார் கோவில் மேற்குவீதி, சித்தன் கேணி. சி- 0761)

108, Brown Rd., Jaffna A/L 89 இரசாயனம்- ஆசிரியர்: சத்தீஸ் காலை வகுப்பு ஆரம்பம்: 4-9-87 (வெள்ளி) 6-30 a m. நேர அட்டவணை முதல் வகுப்பில் தரப்படும். மாலை வகுப்பு ஆரம்பம்: 5- 9- 87 (சனி) 5 p.m. (சனி, ஞாயிறு 5 p. m.) [சி- 0759]

## பயிற்சி

Telex & I. D. D. Operators (இருபாலாரும்). (International) - Electric wiring, Radio & Television, Radio Officers (Ship - P. M G.) தொழிற் பயிற்சியுடன் சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம்: 5-9-87. Electros–Thirunelvely Junction. (C 0634)

## மணப்பந்தல்

32 வயதுடைய இந்து வேளாள பயிற்றப்பட்ட கணித ஆசிரியருக்கு சிவந்த அழகான மணப்பெண் தேவை உத்தியோகம் விரும்பத்தக்கதன்று. முதல் கடிதத்திலேயே முழு விபரங்களையும் (சாதகம்) அறியத்தரவும் சீதனம் எதிர்பார்க்கப்படும். விளம்பர இல 0696 மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். (சி 0696)

## தேவை

மின்தறியில் அனுபவமுள்ள (இயக்குநர்கள்) பெண்கள் தேவைப்படுகிறார்கள். தகுதி உள்ளவர்கள் நேரில் வரவும் கணேசன் ரெக்ஸ்ரைல் மில்ஸ், தாவடி வடக்கு கொக்குவில். (சி 0735)

நன்கு அனுபவம் உள்ள ரேடியோ ரெக்னீசியன்தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். கொமிசன் அடிப்படையில் பொறுப்பேற்று நடத்தக்கூடியவரும் விரும்பத்தக்கது. நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும். எலெக்ரோ வொய்ஸ் நவீன சந்தை மேல்மாடி சாவகச்சேரி. (சி 0741)

PRAYER

★ Sacred heart of Jesus I trust in thee.

★ St Jude helper of helpless pray for us.

C. R. B.

[C-0742]




(ஏ 2140)

## A/L 88 Day Class

10-30: காவிகள்
11-45: திரிகோண கணிதம்

ஆரம்பம்: 3 -9-87

திரு. ரவிமோகன்

யாழ்ப்பாணம்

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்]

சி-0719

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

### செல்லப்பா இராசசிங்கம்

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்)

மலர்வு: 16-02-1921
உதிர்வு: 02-08 1987

குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து எம்மையெல்லாம் வழிநடத்திய அன்புத்தெய்வமே! உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம் அன்னாரின் ஈமக்கிரியையில்கலந்துகொண்டோருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், உதவ்ஒத்தாசைகள் புரிந்தோருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள் 1-09-87ல் எமதுஇல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டி கிரியையிலும், சபிண்டீகரணத்திலும் பங்குபற்றுமாறு யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம். பாசத்துடன் நினைவுகூரும்:

குடும்பத்தினர்.

வெல்லிக்கந்தோட்டம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (சி 0758)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வேலுப்பிள்ளை முருகேசபிள்ளை

(கோப்பாய் ரூஜினிஸ்ரோர் உரிமையாளர்)

தோற்றம்: 27-04-1922
மறைவு: 21-09-1985
திதி: 31-08-1987

அன்பும், பண்பும், அறிவும் ஆற்றலும் கொண்ட எம் குடும்பத் தலைவா! ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் பசுமையாகவே இருக்கும். உங்கள் நாமம் வாழ்க.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"ரஞ்சனி வாசம்",
கோப்பாய் வடக்கு.
((சி 0754)

## பிரிவுபசார வைபவம்

(பலாலி)

மயிலிட்டி, ஊறணி பகுதி பங்குத்தந்தையாகக் கடமையாற்றிய வணபிதா. சந்தியாபிள்ளை, வணபிதா ஜெயராட் ஆகியோர் இடமாற்றலாகிச் செல்வதால் தெல்லிப்பழை பகுதி கிறிஸ்தவமக்கள் அவர்களை கௌரவித்து பிரியாவிடை ஒன்று தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் உள்ள அன்னைவேளாங்கண்ணி மாதா ஆலயத்தில் கடந்த வாரம் நடத்தினார்கள்.

## புதிய நிர்வாகிகள்

கிளிநொச்சி

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் கிராமமுன்னேற்றச்சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் திரு கே. தில்லையம்பலம் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவானார்கள்:

தலைவா: திரு பி. விநயகமூர்த்தி, உபதலைவர்கள்: ஞா. செல்வரெத்தினம், அ கோபாலச்சந்திரன், செயலாளர்: சி. கந்தசாமி, உபசெயலாளர்: எஸ் கௌரிபாலா, பொருளாளர்: கி. விக்னேஸ்வரன்.

## "தமிழர்கலாசாரம் பழமையானது"

(உடுவில்)

"தமிழர் கலாசாரம் மிகப் பழமைவாய்ந்தது. சிறந்தகலாசாரங்களை நாம் கடைப்பிடிக்கத் தவறுகிறோம். எமது கலாசாரசிறப்பினை எடுத்துக்கூறும் 'இந்து கலாசாரம்' போன்ற நூல்கள் இக்காலசட்டத்துக்கு அவசியமானவை".

இவ்வாறு நல்லூர் மேற்கு வீதியிலுள்ள பிள்ளையார் கோவிலில்நடைபெற்ற 'இந்து கலாசாரம்' நூல் வெளியீட்டு விழாவில் நூல் பற்றிய சிறப்புரை வழங்கிய சித்தாந்தகலாநிதி க. கணபதிப்பிள்ளை கூறினார்.

## மின்கட்டண பாக்கி அறவிட நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதியிலிருந்து இலங்கைமின்சாரசபைக்கு சேரவேண்டிய சுமார்20 லட்சம் ரூபாவை திரட்டும் நடவடிக்கையில் விரைவில் சபையினர் ஈடுபடவுள்ளனர்.

கடந்தகாலங்களில் இப்பகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் மின்பாவனையாளர் பலர்தமது கட்டணங்களை கட்டத் தவறியதுடன் சட்டவிரோத பாவனையால் பலகோடி ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது இவ்வாறு திரட்டப்படவிருக்கும் 20 லட்சம் ரூபாவில் 8லட்சம் ரூபா யாழ்ப்பாணத்திலிருந்து சபைக்குசெலுத்தப்பட வேண்டியதாம்.

## இரத்த பரிசோதனை

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்குப் பகுதியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வீடுகளுக்கு நுளம்பு கொல்லிக் கிருமிநாசினி தெளிக்கப்பட்டதுடன் குடியிருப்பாளர்களின் இரத்தமும் பரிசோதிக்கப்பட்டது.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த இளம் பெண் ஒருவருக்கு மூளைக்காச்சல் நோய், அறிகுறி காணப்பட்டதை அடுத்து சுகாதாரப்பகுதியினர் இந்த நோய்த்தடை முயற்சிகளை மிகத் தீவிரமாக மேற்கொண்டனர்.

# கிளர்ச்சிக்காரர்களை மன்னிக்கும் கேள்விக்கே இடமில்லை - ஜனாதிபதி அக்கினோ

மணிலா, ஆகஸ்ட், 30

பிலிப்பைன்ஸிலுள்ள கிளர்ச்சிக்காரர்களை மன்னிக்கும் கேள்விக்கே இடமில்லை என்று ஜனாதிபதி திருமதி அக்கினோ தெரிவித்தார்.

கிளர்ச்சி தமக்கு எதிரான தொன்றல்ல என்றும் ஆனால் நாட்டிற்கு எதிரானது என்றும் அவர் கூறினார்.

திடீர்ப்புரட்சியில் ஈடுபட்ட சுமார் அறுநூறு படைவீரர்கள் மணிலா கடலில் கடற் கப்பலொன்றில் காவலில்வைக்சப்பட்டுள்ளனர்.

இங்கு காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களில் புரட்சித் தலைவர் ஒருவர் உட்பட முன்னூறு பேர் வரையில் தப்பிஓடிவிட்டதாக அறியப்படுகிறது.

பிலிப்பைன்ஸில் இடம் பெற்ற திடீர்ப்புரட்சியை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கண்டித்துள்ளார்.

திருமதி அக்கினோவிற்கு ராஜீவ் காந்தி அனுப்பிவைத்துள்ளசெய்தியொன்றில்; ஜனநாயகத்தை அழிக்க முயன்ற ஒரு செயல் தக்கதருணத்தில் முறியடிக்கப்பட்டுவிட்டதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம் என்று தெரிவித்துள்ளார். [ஒ]



யாழ். கோட்டை இராணுவ முகாமில் கடந்த வியாழனன்று விடுதலைப் புலிகளினால் ஒப்படைக்கப்பட்ட வெடி மருந்துகள், கண்ணிவெடிகளையும் இந்திய அமைதிகாக்கும் படையினர் அவற்றைப் பார்வையிடுவதையும் படத்தில் காணலாம்.

## ஒப்பந்தம்: "பெரும்பாலான சிங்களவர் ஏற்றுள்ளனர்"

சென்னை, ஆக. 30

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைப் பெரும்பாலான சிங்கள மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டனர் என்று போக்குவரத்துத் துறை, முஸ்லிம் விவகார அமைச்சர் எம். எச். மொஹமட் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடையே பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்

இவ்வொப்பந்தம் தொடர்பாக ஏதும் சந்தேகங்கள் தோன்றியிருப்பின் அதற்கு அறியாமையே காரணம் எனத் தெரிவித்த ஜனாப் மொஹமட், இவற்றைப் போக்க தகுந்த விளக்கமளிக்கவேண்டுமெனவும் கோரினார். [ஊ]

## இந்தியாவிலிருந்து 2,500 பஸ்களுக்கு கோரிக்கை

புதுடில்லி, ஆக 30

இலங்கைக்குஅடுத்தஇரண்டு ஆண்டு காலத்தினுள் இரண்டாயிரத்து ஐநூறு பஸ்களை வழங்குமாறு இலங்கைபோக்குவரத்து அமைச்சர் ஜனாப் மொஹமட் இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அடுத்தாண்டினுள் ஐநூறு பஸ்களையும் 89-ம் ஆண்டில் மேலும் 2 000 பஸ்களையும் வழங்குமாறு ஜனாப் மொஹமட் கோரியுள்ளார். [ஊ]

## ரூ. 10,000 பெறுமதியான பொருள்கள்—— கோட்டை முனீஸ்வரன் கோவிலில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கோட்டை முனீஸ்வரன் கோவிலில் சுமார் 10 000 ரூபா பெறுமதியான தங்கவேல் ஒன்றும், தங்கசூலம் ஒன்றும், தங்கச் சங்கிலிஒன்றும், மின்சுவர்க் கடிகாரம், எவர்சில்வர் தாம்பாளம் ஆகியவை திருடப்பட்டுள்ளன.

கடந்த 21ம் திகதி அதிகாலை கோவில் அதிபர் க.ஜெ இராசசிங்கம் வழமைபோல் கோவிலுக்குச் சென்று பார்த்தபோது கோவில் முன் இரும்புக்கதவு உடைத்துத் திறந்திருக்கக் காணப்பட்டது.

கோவிலின்உட்சென்று அவர் அவசரமாகப் பார்த்தபோது கோயிலுக்குரிய பொருள்கள் திருட்டுப்போயிருப்பது தெரிய வந்தது.

இது தொடர்பாக கோவில் அதிபர் நேற்று யாழ் ஆஸ்பத்திரிப் பொலிஸ் பிரிவிலியங்கும் குற்றச்செயல்களுக்கான பதிவுப் பிரிவில் முறைப்பாடுசெய்துள்ளார்.

ஏற்கனவே இராணுவ நடவடிக்கைகளின்போது இடம் பெற்ற 'ஷெல்' தாக்குதலினால் கோபுரம், ஆலயமணி போன்றவை சேதமுற்றதினால் பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட திருத்தவேலைகள் இருப்பதாகவும் அதிபர் தெரிவித்துள்ளார். [கு]

## "ஆயுதங்களை ஒப்படைத்தோமே தவிர போராட்டத்தை நிறுத்தவில்லை"

[ஒட்டுசுட்டான்]

"ஆயுதங்களை ஒப்படைத்தோமே தவிர எமது போராட்டத்தை நாம் நிறுத்தவில்லை எமது போராட்டம் உருவம் மாற்றப்பட்டிருக்கிறது"

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்க தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு. மாறன் தெரிவித்தார்.

நெடுங்கேணியில் தமிழீழ விடுதலைப்புலிகள் தலைமை செயலகம் திறப்பு விழாவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இக்கூட்டம் ப.நோ கூ. சங்கத்தலைவர் திரு. க. குகராசா தலைமையில் நேற்று நடைபெற்றது.

திரு. மாறன் மேலும் கூறியதாவது "இதுவரை631தோழர்களை பறிகொடுத்து, 10,000க்கு மேற்பட்ட மக்களை இழந்துவிட்டோம் எமதுலட்சியத்தை அடையாமல்இருக்கமுடியாது. எங்கள் கழுத்தில் உள்ள 'சைனட்' கழட்டப்படபோவதில்லைசைனட் இருக்கும்வரை எமது போராட்டமும் மன உறுதியும் எங்களைவிட்டு அகலாது இனி மக்களும்எம்முடன் சேர்ந்து போரடாமுன்வரவேண்டும்.

செயலகத்திறப்பு விழவின் போது ஆரம்பத்தில் செந்நிறப் புலிக்கொடி ஏற்றப்பட்டது அதைத்தொடர்ந்து மறைந்த போராளிகளின் புகைப்படங்களுக்கு பொதுமக்களால் 631 மெழுகுவர்த்திகள்கொழுத்தப் பட்டபின்பு விடுதலைக் கீதமும் இசைக்கப்பட்டது.

## 35 வருட காலமாக----- 'அகிம்சை வழியில் போராடுபவர் அமிர்

[பண்டத்தரிப்பு]

"தமிழினத்தின் நல்வாழ்வுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் கடந்த 35 வருடகாலமாக அகிம்சை வழியில் நின்று திரு அமிர்தலிங்கம் ஆற்றியுள்ள சேவைகளை நாம் மறந்துவிட முடியாது. தந்தை செல்வாவுக்கு பக்கபலமாக இருந்து வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களிடையே இன உணர்வையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் உருவாக்கி தமிழினத்தை ஓரணியில் நின்று உரிமைகளுக்கு போராட வித்திட்டவர் அவர்"

கடந்த புதனன்று பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கத்தின் 60-வது பிறந்த தினவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய பண்டிதர் ப. இராசகுரு இவ்வாறு குறிப்பிட்டார்.

பண்ணாகம் கல்வி, கலை, கலாசார ஒன்றியத்தின் தலைவர் பொன். சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டிதர் ப. இராசகுரு தொடர்ந்து உரையாற்றுகையில் "1956ம் ஆண்டு ஜூன் மாதத்தில் பாராளுமன்றத்தில் தனிச்சிங்களச்சட்டம்கொண்டு வரப்பட்டபோது அங்கு தமிழ்த்தலைவர்கள் நடாத்திய சத்தியாக்கிரகத்தில் கடுமையாக தாக்கப்பட்டு இரத்தம் சிந்திய நிலையிலும் தலையில் கட்டுடன் சென்று பாராளுமன்றத்தில் தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து வாதிட்டவர் திரு. அமிர்தலிங்கம் என்றார்.

அடுத்து முன்னாள் யாழ் மாவட்ட அபிவித்திச்சபை உறுப்பினர் சு. நடேசு உரையாற்றுகையில் தங்கள்சொத்து சுகங்களை இழந்து தமிழினத்தின் உரிமைகளுக்காக போராடிய கூட்டணித்தலைவர்களின் தொண்டுகளை நாம் என்றும் மறந்துவிடமுடியாது அமர்தலிங்கமோ அல்லது ஏனையகூட்டணித் தலைவர்களோ எந்த இயக்கத்திற்கும் எதிரானவர்கள் அல்ல என்பதைஅனைவரும் அறிவார்கள்." என்றார்.

பண்டிதர் இ. ஆறுமுகம் உட்பட கூட்டத்தில் பலர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

## திருமலை பகுதியில் புலிக்கொடி

[திருமலை]

திருமலை நகரில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் திருஞானசம்பந்தர்வீதி, சிவன் கோவிலடி, கஸ்கிசன் வீதி, மெயின் வீதி, கருங்காலி ஒழுங்கை, கிறீன் வீதி, மின்சார நிலையவீதி, ஆகிய பகுதிகளில் வீடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

## புங்குடுதீவில் அமைதிப்படை ரோந்து

(புங்குடுதீவு)

இந்திய அமைதிகாக்கும் படையினர் புங்குடுதீப்வுபகுதிக்கு ரோந்துசேவையில் ஈடுபட்டுள்ளர்.

இந்த ரோந்து சேவையில் சுமார் ஐந்து இராணுவ வீரர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவான்வரை சேவையை மேற்கொண்டிருந்தனர்.

## வலிமேற்கில் முறைப்பாடுகளைப் பதிவதற்கு வழியின்றி மக்கள் தவிப்பு

(பண்டத்தரிப்பு)

வலிமேற்குப் பகுதியில் மக்களிடையே ஏற்படும் சச்சரவுகள், சண்டைகள் ஆகியவற்றையும், திருட்டுச் சம்பவங்கள் பற்றியும் முறைப்பாடு செய்ய முடியாது சம்பந்தப்பட்ட மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

அண்மைக்காலம்வரை இப்பகுதி மக்கள் தங்கள் முறைப்பாடுகளை தமிழீழ விடுதப் புலிகள் இயக்கபிரதேச அலுவலகங்களிலும், தமிழீழ கிராம மன்றங்களிலும் தெரிவித்து நிவாரணம்பெற்று வந்தனர்.

தற்போது இவர்களின் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்வது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால் பொதுமக்கள் தங்கள் முறைப்பாடுகளை சமர்ப்பித்து நிவாரணம்பெறமுடியாது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது

## வவனியா பிக்கு, பிதா யோகானந்தா செப்டெம்பரில் யாழ் விஜயம்

(வவனியா)

வவனியா கண்டி வீதி விகாராதிபதியும் வன்னி சமாதானக்குழுவின் தலைவருமான வண. சியம்பலகஸ்வல விமலசிகார தேரோவும், வண. பிதா யோகானந்தாவும் செப்ரம்பர் மாதத்தில் யாழ். செல்லவுள்ளனர். அங்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும், பொதுக்களையும்சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்துப் பேசத் திட்டமிட்டுள்ளனர்.

செப்ரெம்பர் மாதம் 13ம் திகதி இவர்கள் யாழ் விஜயம் செய்வாரெனத் தெரிய வருகிறது.

இதேவேளை இவர்களுடன் யாழ்ப்பாணம் செல்ல தென்பகுதி பிரமுகர்கள் சிலரும் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

## தே. இ.சே. மன்றம நடவடிக்கை

(மண்டை தீவு]

வடக்குக் கிழக்கில் இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கை சிறந்த முறையில் விரிவுபடுத்துவதற்கும் அபிவிருத்தி வேலைவாய்ப்பு, தொழில் ஊக்குவிபபு நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் புதிய நடவடிக்கை எடுத்துள்ளது

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரசார விசாலிப்புப் பிரிவு உதவி இயக்குனர் ரஞ்சித் ஹேவாடக்கே இதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்'

## மணிவாக்கு

சொல்லப் பயன்படுவர் சான்ருேர்;
கரும்புபோல்
கொல்லப் பயன்படும்கீழ்.

— குறள்

(சான்ருேருக்குச் சொன்னுல்போதும், பயன்படும் காரியம் செய்வார்கள். கீழ்மக்கள் பலாத்காரத்துக்குத்தான் இணங்குவார்கள்.)

## நமது நோக்கு

# ஒரு தலைமுறைதப்ப ஒன்றுபடுவோம்

இன்று நாட்டின் பாடசாலைகள்மூன்ரும்தவணைக்கு ஆரம்பமாகின்றன. சாதாரண காலத்திலேயே கடைசித் தவணையை படிப்புக்கென்று பிரத்தியேகமாக ஒதுக்குவது ஆசிரியரினதும் மாணவரினதும் வழக்கம். இன்று அது ஒரு தலைமுறையின் விதியை நிர்ணயிக்க வல்லகாலமாக விருக்கிறது.

கடந்த தவணை முடிவில் ஏ எல் பரீட்சைகள் குழப்பமின்றி நடைபெற ஒரு போர் நிறுத்தம்- தற்காலிகமாவது- அவசியமென்பதை வற்புறுத்தினேம். எவ்வித குழப்பமுமின்றி பரீட்சை நடந்தேற வடக்கிலும், கிழக்கிலும் தமிழ்ப்போராளிகளின் ஒத்துழைப்பு இன்றியமையாதென வற்புறுத்தினேம்.

கூத்துக்குள் கோமாளி போன்று, பரீட்சைத்திணைக்களம் பரீட்சை திட்டமிட்டபடி நடந்தே தீருமென்று அறிக்கை விடுத்தது. போரினுல் பாதிக்கப்பட்ட வடக்குக்கும் கிழக்குக்கும் எவ்வித தாட்சிணியமும்காட்ட மறுத்தது.

திட்டமிட்டபடி பரீட்சை நிறைவேற முடியவில்லையே! எதிர்பார்த்த வடக்கும் கிழக்கும் அதற்குத்தடையாகவிருக்கவில்லையே! இங்குள்ள பரீட்சார்த்திகளுக்கு ஆறுதலளிக்கும் வகையில் காத்திராப்பிரகாரமான இடைவெளி கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது.

அரசனே பிரஜையோ எவருக்கும் எட்டாத ஒரு சக்திக்கு கட்டுப்படவேண்டிய அவசியம் சில சமயங்களில் உண்டாகிறது. வரலாற்று ஆசிரியர்கள்இதனை நிகழ்ச்சிகளின் திருப்பம் எனக் குறிப்பிடுகின்றனர்.

ஜனதிபதி லிங்கன் ஜனதிபதியாக வெள்ளைமாளிகையில் அமர்ந்தபோது அவரை வாழ்த்திய ஒருவர், 'மிஸ்ரர் பிறெசிடென்ற் இந்த நாட்டை ஆண்டவனும் நீங்களும் பாதுகாக்க வேண்டும்'என்ருர். அதற்கு பதிலளித்த லிங்கன், ''நன்றி, நீங்கள் சொல்வதில் அரைவாசிதான் உண்மை'' என்ருராம்.

பணிவுடனும்தெய்வபக்தியுடனும் பணிபுரிந்த லிங்கனின் கருத்து இன்று எங்கள் நாட்டுககு பொருத்தமாகிறது.

இன்று எங்கள் பாடசாலைகள் நாட்டின் படிப்புக்கு உகந்த நிலையில் இருப்பதானுல், லிங்கன் சொன்னது போல் ஆண்டவன்தான் இந்த நாட்டையும் அதன் ஜனதிபதியையும் பாதுகாக்கிருனென்று கொள்ளவேண்டும்.

தமிழர் பிரச்னை தமிழருக்கே உரியதென்ற அலட்சியப்போக்கும் அதன் தீர்வினுல் ஏற்பட்ட குரோதமும் அனைவருக்கும் ஒரு படிப்பினையாகும். நாட்டின் எந்தப் பகுதியும் பாதிப்புற்ருல், அது அனைவரையும் தாக்கும் என்பதே பாடம்.

போர்நிறுத்தம் ஒரு வரப்பிரசாதம்; அதனை மூலதனமாகக்கொண்டு. புனர்வாழ்வுக்கேற்ற அரசியலைக் கட்டியெழுப்புவது இன்றியமையாததாகின்றது அதன் முக்கிய அம்சம் கல்வியே. இன்று உருவாகும் அமைதியைப் பாழ்படுத்த முயல்பவர்கள், வடக்கிலும் கிழக்கிலும் சீரழிந்திருக்கும் வருங்காலச் சந்ததியை முற்ருக அழிக்க முயல்பவர்களே!

பல ஆண்டுகளாக எமது கல்வி பாழடைந்திருந்த போதும், இவ்வாண்டில் உண்டான அழிவு அளவு கடந்தது. இன்று தொடங்கும் இவ்வருடத்தின் இறுதித் தவணையில் வருடத்தின் விட்டகுறை தொட்டகுறை அனைத்தையும் நிரப்ப அனைவரும் ஒன்றுபடவேண்டும் மாணவர், ஆசிரியர், பெற்ருேர் ஆகியமூவருமே கல்வியின் பிரதம பங்காளர்; பொதுமக்களின் ஒத்துழைப்பு கிடைப்பதற்கு இம்மூவரும் தக்கமுறையில் செயற்படுவது தவிர்க்கமுடியாத கடமை.

வீட்டிலிருந்து பாடசாலைக்குப் போகும்மாணவருக்கு ரேட்டில் காலன் எந்நேரமும் காத்திருக்கிருன். இதற்கு யாழ்ப்பாணம் நாட்டுக்கே ஒரு எச்சரிக்கை; சைக்கிள், மோட்டார்சைக்கிள், கார், பஸ், லொறி எல்லாவற்றிற்கும் மேலாக, தனியார் வான், பாடசாலை மாணவரைப் பதம்பார்க்கக் காத்திருக்கின்றது பாடசாலைக்குள் பாதுகாப்பாக செல்லும் மாணவர்களுக்கு அதிதீவிர சிகிச்சை போன்ற கல்விகிடைப்பது அவசியம்.

சிலகாலம் படிப்பைக் கைவிட்டு அகதிகளாக, போராளிகளாக, அல்லது தடுப்புக்காவலில் துன்புறற இளைஞர்களை வரவேற்க பாடசாலைகள் தயாராக வேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலும் சிவில்நிர்வாகம் சீரடையும் வரை, போராளிகள் திட்டமிட்டு தங்கள் தியாகப்பணியில் தொடரட் பொதுமக்களும் ஆதரவளித்தல் அவசியம்.

கட்சிப் பரிபாஷைகளைக் கைவிட்டு பெற்ருேரென்ற ஒரே அடிப்படையில்,எல்லாவித உதவியும் ஒத்தாசையும் நல்குவது மக்களின் பெரும் பொறுப்பு.

வானம்பார்த்த பூமியில் பிறந்த நாம் கல்வியால் வானத்தை எட்டிப்பிடிக்குமளவிற்கு உயர்ச்சிபெற்ருேம்; அதற்கு உண்டான இடையூறு கழியும் தருணம் இது எனவே எல்லோரும் கொடுக்கை இழுத்துக்கட்டினுல் தேரோட்டம் சுமுகமாகத் தொடரும்.

# இந்திய-இலங்கை ஒப்பந்தம் எத்தகையது - ஒரு கண்ணேட்டம்

ஆசியாக் கண்டம் முழுதுமே சமாதானம் அடைவதற்கு இந்திய இலங்கை ஒப்பந்தம் வழி வகுத்துள்ளதென்று உலகில் பிரசித்திபெற்ற அரசியலவதானிகள் அபிப்பிராயம் கூறியுள்ளனர். இந்திய நலனுக்கு இலங்கை மாருகப் போகாதவாறு இவ் ஒப்பந்தம் வழிவகுக்கிறது. இலங்கை துண்டாடப்படுவது தவிர்ப்பதுமல்லாமல் தற்போதுள்ள அரசை உட் கலகங்களிலிருந்தும் பாதுகாக்க இந்தியப் படைகளை அழைப்பதற்கு வசதி செய்கிறது.

இந்த ஒப்பந்தத்தினுல் பாதிக்கப்படுப் மூன்ரும் கட்சியுமொன்றுள்ளது. அதுதான் இலங்கைத் தமிழர்கள்.

சுதுமலைக் கூட்டத்தில் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே.பிரபாகரன்: 'இந்த விடயத்தில் இந்தியாவுடன் ஒத்துழைப்பில்லாமல் எமக்கு வேறு வழியில்லை எனினும் இந்தியப் பிரதமரிலும் அவர் மொழிந்த கூற்றுக்களிலும் எமக்கு நம்பிக்கையுண்டு' என்று கூறியுள்ளார். ஒப்பந்தம் கைச்சாத்தான போது இது ஒரு ஆரம்பமே என்று பேசியுள்ளார்.

இந்த ஒப்பந்தம் ஒரு வரிவடிவம் அதன் அமுலாக்க மூலமே தசை குருதி அதற்கு வந்து பொருந்தும். தமிழ் மக்களுக்கு இதுஒரு திருப்திகரமானதல்ல; எனினும் அதன் அமுலாக்கத்தில் தமிழர்களுக்கு வேண்டிய உரிமைகள் கிடைக்குமென இந்தியா கூறிவருவதால் நாம் ஒத்துழைப்பை நல்கலாம், இதனுல் பின்பும் இரத்தப் பெருக்கையும் அழிவையும் நாம் தவிர்க்கக்கூடியதாக அமையலாம். ஆனுல் தமிழ் மக்களின் இவ்வொப்பந்தம் பற்றிய விளக்கத்தை உலகம் அறிய வேண்டியுள்ளது.

ஒப்பந்தத்தின் 2.2 பந்தி கூறுவதாவது:

''இப்போதுள்ள வடகீழ் மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட ஒருபிரிவாக அமையும் மாகாண சபையைக் கொண்ட நிர்வாகப் பிரிவாக அமையும் ஒரு ஆளுனர், ஒரு முதல் மந்திரி ஒருமந்திரிசபை உடையதாகவிருக்கும்''

**சி. பொன்னையா**
சட்டத்தரணி

''இந்த மாகாணசபை ஒரு வருட காலத்துக்கு மாத்திரம் இருக்கும் அதன்பின்பு வட மாகாணத்துடன் ஒரேயொரு நிர்வாகப் பிரிவாக கிழக்கு மாகாணம் சேர்ந்திருக்க வேண்டுமா அல்லது பிரிந்து வேறு ஒரு தனித்துவமான நிர்வாகப் பிரிவாக வேறு ஆளுனர் முதல் மந்திரி,மந்திரி சபையைக் கொண்டு இருக்க வேண்டுமா என்பதை மக்கள் வாக்கெடுப்பில் கீழ் மாகாண மக்களே நிர்ணயிக்க உரித்துடையவராவர்.''

வடகீழ் மாகாண மக்களின் அபிப்பிராயம் என்னவெனில் இந்த இரண்டு மாகாண மக்களின் பாதுகாப்புக் கருதி மக்கள் வாக்கெடுக்கும்தேவையை நிராகரித்து உடனடியாகவே இம்மாகாணங்கள் ஒரேயொரு நிர்வாகப் பிரிவாக அமைந்து நிரந்தரமான அமைப்பாக இருத்தல் வேண்டுமென்பதே. தெலுங்கு மொழியைப் பேசும் ஆந்திரப் பிரதேச மக்களும் கைதராபாத் மக்களும் ஒன்றிணைந்து ஒரு ஆட்சியின் கீழ் இருப்பது போல் வடகீழ் மாகாணங்கள் இணைய வேண்டுமென தமிழ்மக்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

பின்வரும் காரணங்களுக்காக இரு மாகாணங்களிலும் வாழும் தமிழர்கள் உத்தேச மக்கள் வாக்கெடுப்பைஆதரிக்க மாட்டார்.

1. வடகீழ் மாகாணங்களை இணைப்பதே நோக்கம். உத்தேச வாக்கெடுப்பினுல் பாதிக்கபபடும் யாழ் மக்கள் இந்த வாக்கெடுப்பில்கலந்துகொள்ள வழிவகுக்கப்படவில்லை. இணைப்புக்கு நல்ல ஒரு ஜனநாயக அடிப்படையில் அபிப்பிராயம் காண்பதற்கு இந்த மட்டுப்படுத்தப்பட்ட வாக்கெடுப்பு தடையாகவுள்ளது.

2. இணைவதா அல்லது பிரிவதா என்பதை நிர்ணயிக்க உத்தேசவாக்கெடுப்பில்கிழக்கு மாகாண மக்கள் மாத்திரமே வாக்களிப்பர் என்று ஒப்பந்தம் குறிக்கிறது. கீழ்மாகாண மக்கள் என்ற போது சிங்கள மக்களும் வாக்களிப்பர் தமிழ் மக்கள் தங்களது பிற்காலத்தைத் தாங்களே நிர்ணயிக்க வேண்டியிருக்கும் போது சிங்கள மக்கள் வாக்களிப்பது ஒவ்வாதது, ஜனநாயகமற்றது.

கீழ்மாகாண மக்கள் என்பதில் இஸ்லாமியரும் அடங்குவர் முதலாக கீழ் மாகாணத் தமிழர்களுடனேயே தாம் இணையவேண்டுமா என்பதை இஸ்லாமியர் தீர்மானிக்க வேண்டும். இதற்கு மறுப்பதானுல் இரண்டு மாகாணங்களிலுமுள்ள தமிழர்கள் இணைவதற்கு ஏன் இஸ்லாமியர் குறுக்கே நிற்க வேண்டும்? தமிழர்களுடன் இணைந்து வாழவிரும்புகில் யாழ்ப்பாணத் தமிழர்களும் இஸ்லாமியர்களும் சகோதர அன்புடன் இணைந்து வாழ்வது போல் சகல இஸ்லாமிய மக்களும் தமிழ் மக்களும் சேர்ந்து வாழ்வதே சாலச் சிறந்தது இந்த இணைப்புக்கு மாருக அரசாங்கமும் அதன் கொழும்பு இஸ்லாமிய ஆதரவாளர்களும் பிரசாரம் செய்வர்; அவர்கள் தமிழ்மக்களுக்கும் இஸ்லாமிய மக்களுக்கும் இடையில் பிளவை உண்டுபண்ண முயல்வர்; இந்தமுயற்சியை இஸ்லாமிய மக்களும் தமிழ்மக்களும் ஒன்றுசேர்ந்து முறியடிக்கவேண்டும். இணைப்பை ஒழிப்பதற்கு இஸ்லாமியர்களுக்கு கவர்ச்சிகரமான பதவிகளை அரசு வழங்க முயலும். இந்தப்பதவிகள தூண்டிலிற்போட்ட இரைகள்! உத்தேச வாக்கெடுப்பு ஒரு தீய எண்ணத்தைக் கொண்டது; எனவே தமிழ் மக்கள் இதை எதிர்ப்பது நியாயமாகும்.

தமிழ் இஸ்லாமிய மக்கள் அவதானமாகவும் சகோதர மனப்பான்மையுடனும் நடந்து கொள்வது மிகமிக முக்கியம். தாம் அதிக பிரியமாகப் பாதுகாக்கும் தமிழ் கலாசாரத்தின் பங்குதாரர்களே தமிழ் மக்களும் இஸ்லாமிய மக்களும். தமிழர்களில் இலங்கை இஸ்லாமியரும் அடங்குவர் இந்த இரு சமூகத்தவரின் மனப்பூர்வமான ஒற்றுமையிலேயே அவர்களின் பலமும் பிற்காலமும் தங்கியுள்ளது.

4. உண்மையில் சமாதானமான, நிரந்தரமான ஒரு தீர்வை தமிழ்ப் பிரசனைக்குக் கொண்டுவர அரசு விரும்புமானுல். தமிழர் மறுதலிக்கும் இந்த வாக்கெடுப்பை ஏன் அரசு கொண்டுவந்து தமிழ்ப் பிரச்னையைமேலும் சிக்கலாக்க வேண்டும்? இதனுலும் தமிழர் இதை எதிர்சகவேண்டியிருக்கிறது. ஜனதிபதி ஜெயவர்த்தன அவர்களே இணைப்புக்கு மாருகப் பிரச்சாரம் செய்யப் போவதாகக் கூறியுள்ளார். இவர், இதனுல் தமிழ்பேசும் மக்களை அந்நியப்படுத்துகிருர்.

5 ஒப்பந்தத்தின் சில சிபார்சுகள் தெளிவுபடுததப்படவேண்டியதாகவுள்ளன. பந்தி 2 15 கூறுவதாவது: ''4. 5. 1986 தொடங்கி 19-12-1986 வரை நடத்திய பேச்சுவார்த்தைகளின் பலனுகப் பொருந்திய சிபார்சுகளை ஏற்பதின் நிபநதனையிற்ருன் இன்று இந்தச் சிபார்சுகளை ஏற்பது தங்கியுள்ளது''

மார்கழி 19 ம் திகதி சிபார்சுகளின்படி கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறை மாவட்டத்தைப் பிரிப்பதும், எஞ்சிய கிழக்கு மாகாணத்தை ''புதிய கிழக்கு மாகாணம்'' என்பதும் அமைந்துள்ளது. ஆனுல் ஒப்பந்தத்தின் சிபார்சில் புதிய மாகாணம் என்ற சொற்தொடர் இல்லை; ''வடகீழ்

(10ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### இந்தியநிவாரணம் ஊழலா, பாகுபாடா?

இராணுவ நடவடிக்கைளினுல் பாதிப்படைந்த யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரண உதவியாக இந்தியா வழங்கிய ஒரு லட்சம் கிலோ சீனிக்கு என்ன நடந்தது? என்ற செய்தியை (26-08-87) 'ஈழநாட்டில்' முன்பக்கத்தில் அம்பலமாக்கியதையிட்டு பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

உண்மையில் இராணுவ நடவடிக்கைகளினுல் முதன் முதல் பாதிப்பு அடைந்த மக்கள் கொட்டடியைச் சேர்ந்த மக்கள்தான். ஷெல் தாக்குதல். பம்மர் தாக்குதலால் உயிரை இழந்து, உடமைகளை இழந்து இன்னும் வீடுகளையும் இழந்து வெளியேறிய மக்கள் கொட்டடி மக்கள், அப்படியாகயிருந்தும் நிவாரண உதவிகள் வழங்கும்பொழுது-கொட்டடி வாழ் மக்களுக்கு கடைசியாகத்தான் நிவாரண உதவி வழங்கப்பட்டது அதிலும் இந்தியா வழங்கிய நிவாரண உதவி வழங்கியதில் ஏனைய பகுதி மக்களுக்கு வழங்கியதுபோல் எல்லாப் பொருட்களும் வழங்கப்படவில்லை. நீங்கள் பத்திரிகை செய்தியில் குறிப்பிட்டது போல் ஏனைய தொகுதி மக்களுக்கு வழங்கப்பட்ட எல்லாப் பொருள்களும் வழங்கப்படாபடாமல் விட்டதுமல்லாமல், குறிப்பாக அறிவிக்கப்பட்ட மண்ணெண்ணெய்கூட எமக்கு வழங்கப்படவில்லை. தென்மேற்கு கிராமசேவை அலுவலர் பிரிவிலுள்ள குடும்பத்திற்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் மட்டும் வழங்கப்பட்டதென உங்கள் செய்தியில் குறிப்பிட்டது தவறு என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

இந்தியா வழங்கிய நிவாரண உதவிகளை நல்ல முறையில் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அண்மையில் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தலைவர் திரு ஆர். பாலசுப்பிரமணியம் பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டிருந்ததார், ஆதனுல் இப்போது உண்மைநிலை தெரியவந்துள்ளது இவற்றை யாழ் செஞ்சிலுவைச் சங்கமும், உதவி அரசாங்க அதிபர்களும் உடனடியாக விசாரித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் வேலியே பயிரை மேய்ந்த கதையாகிவிடும்.

சி. இரத்தினசபாதி.

# மனோகரன் & வெற்றிவேல் 18-வது ஆண்டு சிறப்பிதழ்

கட்டிட அமைப்பில் கடந்த 18 வருடங்களுக்கு மேலாக இக்கட்டான சூழ்நிலையிலும் தளராது எம்மக்களுக்குச் சேவை செய்த மனோகரன் & வெற்றிவேலு ஸ்தாபனத்தார் வடமாகாணத்தின் புனரமைப்புத் திட்டங்களிலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளத் தயாராகின்றார்கள்.

## சேவைகள்

- கட்டிட வரைபடம் தயாரித்தல்
- நீலப்பிரதிகள் எடுத்தல்
- கட்டிட மதிப்பீடு
- கட்டிட அமைப்பு
- கட்டிட புனரமைப்பு
- கட்டிடப்பொருள்கள் விநியோகம்

மனோகரன் & வெற்றிவேல் ஸ்தாபனத்தாரால் அமைக்கப்பட்ட கட்டிடங்களில் சில



செல் அடிகளுக்கும் பீரங்கித் தாக்குதல்களுக்கும் ஈடுகொடுத்து தலைநிமிர்ந்து நிற்கும் தந்தை செல்வா நினைவாலயம்.




15 வருடங்களுக்கு மேலாகியும் இன்றும் அதே பொலிவுடன் காட்சியளிக்கும் ஹட்டன் நாஷனல் வங்கி.



அறிவுச்சுடர் பரப்பும் இவிலின் ரட்ணம் கலாசார நிலையம்.



நவீனமயப்படுத்தும் பல்கலைக்கழக தூயகணித கொம்பியூட்டர் நிலையம்.



எழிலான யாழ். பல்கலைக்கழக ரசாயன பீட கட்டிடம்



அதிக பரப்பளவு கொண்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட கட்டிடம்

உங்கள் தேவைகளை நிறைவேற்றக் காத்திருக்கும்:

S. K. மனோகரபூபன்,
M. கருணாதேவி

தலைமையகம்:
உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.

நிர்வாகப் பங்காளர்:
மனோகரன் & வெற்றிவேல்.

இல்லம்:
இளவேனில் அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம்

(ஏ 2129)

# கைதிகளை விடுவித்து அரசு நம்பிக்கை அளிக்கவேண்டும்

## இந்தியத்தூதருக்கு சிங்கராயர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

"இந்திய இலங்கை உடன்படிக்கையின் 2: 11ம் பந்தியில் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வது; அவர்களுககு மன்னிப்பு அளிப்பது தொடர்பாகக் கூறப்பட்ட போதிலும், சகல ஆயுதங்களும் கையளிக்கப்பட்ட பின்பே இவ்விதி அமுல் படுத்தப்படுமெனப் பத்திரிகை வாயிலாக நான் அறிய வருகிறேன். இலங்கை அரசுதான் முதற்தடவையாக 74 ஜன. 10ல் வீரசிங்கம் மண்டபவாசலில் பத்து அப்பாவிப் பொதுமக்களைக்கொலை செய்தது. இதன் காரணமாகவே எமது தமிழ்த் தீவிரவாதிகள் ஆயுதங்களை ஏந்தத் தொடங்கினர். எனவே இலங்கை அரசு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதன் மூலம் பொது மக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்க வேண்டும்."

இலங்கையிலுள்ள பூஸா, வெலிக்கடைச் சிறை போன்ற தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை விடுதலை செய்வதன் அவசியத்தை வலியுறுத்தி கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் திரு ஜே. என் டிக்ஸித்துக்கு எழுதியுள்ளகடிதமொன்றில் வண. பிதா. ஆபரணம் சிங்கராயர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்-

அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

எனது சிறை வாழ்க்கை அனுபவத்தின் மூலம் தமிழ் அரசியல் கைதிகளின் உயிர்களுக்கு எந்நேரத்திலும் அச்சுறுத்தல் ஏற்படலாமென நான் உணர்ந்துள்ளேன். 1983 ஜூலை 25ல் வெலிக்கடைச் சிறைச்சசாலையில் கைதிகளாக விருந்த எமது தோழர்கள் 35 பேர் கோரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

மற்றும் 13 பேர் 1983 யூலை 27 இல் கொல்லப்பட்டனர்.

1987 ஏப்ரல் 22ல் தமிழ் பேசும் அரசியல் கைதிகளைக் கொலை செய்வதற்கான மற்றுமொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது நாம் மூன்று மணித்தியாலங்களாகப் போராடி எம்மைப்பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது 1983 ஜூன் 27ல் பூஸா தடுப்பு முகாமில் 9 தமிழர் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டனர்.

எனக்கெதிரான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சமாதான உடன்படிக்கை பற்றிப் பேசிய சிரேஷ்ட அரச சடடத்தரணி ஏ. ஆர் ஸி. பெரேரா சட்டமா அதிபரின் கடிதமொன்றைச் சமர்ப்பித்து, தொடர்ந்தும் வழக்கை நடத்தவில்லையெனக் கூறினர். அந்நேரத்தில் மற்றைய வழக்குகள் தொடர்பாகவும் அந்நிலை கடைப்பிடிக்கப் படுமெனவும் அவர் குறிப்பிட்டார். ஆனல் இரு வாரங்கள் கடந்தும் இது வரை தமிழ்க் கைதிகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

பயங்கரவாத தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டவர்களுக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டம் 2ம்பிரிவின் கீழ்வழக்கை தொடர்ந்து நடத்துவதை நிறுத்தலாம். குற்றவாளிகளாககாணப்பட்ட கைதிகளுக் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் மன்னிப்பு அளிக்கப்படலாம். அதனை ஜனதிபதி தனது பிறந்த தினத்தன்று செய்வாரென நினைக்கின்றேன்.

தடை உத்தரவின் கீழ் பூஸா மற்றும் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அமைச்சரின் தடை உத்தரவு நீங்கல் கடிதத்துடன் விடுதலை செய்யப்படலாம் ஆனல் எனது வழக்கின் போது சட்டமா அதிபர் திணைக்களம் காட்டிய அவசரம் இப்போது காணப்படவில்லை இலங்கை அரசு இவ்விடயத்தில் மிகவும் அசட்டையாகவே உள்ளது.

இலங்கை சிறைச்சாலையிலும், இராணுவ முகாம்களிலும் அரசியல் கைதிகள் பணயக் கைதிகளாகவே வைக்கப்பட்டுள்ளனரென நான் பலமாகச் சந்தேகிக்கின்றேன்.

எனவே இந்த அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்

[சே]

# சடலில் எவ்வளவு தூரம் சென்றும் மீன் பிடிக்கலாம்

## இந்திய கடற்படை பாதுகாப்பு அளிக்கும்

[நெடுந்தீவு]

"சமாதானத்தின் மூலமே சுபீட்சம்ஏற்படும். அதன் மூலமாகவே சகோதரத்துவம் வளரும் என்று இந்திய அமைதி காக்கும்படையின் ஊர்காவற்றுறைப்பகுதி தளபதி மேஜர் ஜே. சி. ஜோசி நெடுந்தீவு மகாவித்தியாலயதிறந்தவெளியரங்கில் அண்மையில் மக்களின் குறைபாடுகளைப் பற்றி கேட்டறியும் பொருட்டு ஏற்பாடுசெய்யப்பட்ட கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அதிவேக விசைப்படகு மூலம் நெடுந்தீவுதுறைமுகத்தில் வந்திறங்கிய மேஜர் ஜே. சி. ஜோசி, இரண்டாவது லெப்டினற் விபின் சக்கரவர்த்தி, மற்றும் குழுவினரை, நெடுந்தீவு பிரஜைகள்குழுப் பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்களும் நெடுந்தீவு ப. நோ. கூ. சங்க வாகன மூலம் பல இடங்களுக்கும் ஊர்வலமாக அழைத்துச்சென்றூர்கள்.

கூட்டத்திற்கு நெடுந்தீவு கொத்தணி பாடசாலைகளின் உபஅதிபர் நா சங்கரப்பிள்ளை தலைமை வகித்தார்.

தொடர்ந்து அவர் தமதுரையில் இனிமேல் இலங்கை ராணுவமோ, அல்லது கடற்படையோ உங்களுககு எந்தக் கஷ்டமோ துன்பமோ தராமல் நாம் பாதுகாப்பு அளிப்போம் என்றூர்.

"மீனவர்கள் கச்சதீவுவரை சென்றுமீன்பிடிக்க இயலுமா" என்று ஒருவர்கேட்ட கேள்விக்கு பதில் அளித்த அவர் நீங்கள் எவ்வளவு தொலைவிற்

(9ம் பக்கம் பார்க்க)

## "மக்களை அரசியம் மயப்படுத்துவது இன்றைய பணி" — ஈரோஸ்பரா

(அலுவலக நிருபர்)

"தீர்வுகளை மையமாக வைசது நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்படுகின்ற ஒற்றுமை ஒருபோதும் நிரந்தரமாக இருக்கமாட்டாது."

"மக்களின் கருத்துக்களுக்கும். அபிலாசைகளுக்குப் ஏற்ற இணைப்பை நாம் வரவேற்கிறோம். இத்தகைய இணைப்பிற்காக நாம் ஆரம்ப முதல் பாடுபட்டு வருகிறோம்."

இவ்வாறு ஈழப் புரட்சி அமைப்பை சேர்ந்த திரு. பரா 'ஈழநாடு'வுக்குத் தெரிவித்தார்.

தமிழ் மக்களினதும் விடுதலை அமைப்புகளினதும் ஒற்றுமை பற்றிக் கேட்டபோது திரு. பரா மேலும் கூறியதாவது:

"ஒற்றுமை என்பது வெறுமனே நிர்ப்பந்தம் பதவி இவற்றின் அடிப்படையில ஏற்படுவதனை ஈழப் புரட்சி அமைப்பு விரும்பவில்லை

தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்னையை வென்றெடுக்கும் ஒட்டுமொத்தமான போராட்டத்தை முன்னெடுக்க தமிழ் பேசும் மக்களுக்காக தமிழ் மக்களும் அனைத்து விடுதலை அமைப்புகளும் ஒத்த கருத்துடன் ஒருங்கிணைவதே உண்மையான கூட்டாக இருக்கும்.

"மக்களை அரசியல் மயப்படுத்துவதும் அவர்களைச் சரியான பாதைக்கு இட்டுச் செல்வதுமே இன்று எம்முன் உள்ள முக்கிய பணியாகும். இந் வகையில் ஈழப் புரட்சி அமைப்பு தொடர்ந்து செயற்பட்டுவரும். (வா)

## நேர்முகப் பரீட்சை

(பலாலி)

யாழ். மாவட்ட சுகாதார சேவை ஆண். பெண் பரிசாரகர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று 31-ம் திகதி காலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும் என பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## புகையிரத அதிபரின் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள பொதுமக்கள் தம்மிடம் சிலிப் பர்கட்டைகள் ஏதுமிருப்பின் அவற்றை யாழ் புகையிரத நிலையத்தில் வழங்கி யாழ்ப்பாணம் வரைபுகையிரதசேவை நடைபெற ஒத்துழைக்குமாறு யாழ் புகையிரதநிலைய அதிபர் வேண்டியுள்ளார்.

## கடனுதவி

(மண்டைதீவு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச திணைக்கள, அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்கு கடனுதவி வழங்குவது தொடர்பான விசேட சுற்று நிருபத்திற்கமைய, பனை அபிவிருத்திச்சபை இதன் பணியாளர்களுக்கு மூன்று மாத கால சம்பளத் தொகையை முற்பணமாகவழங்கிவருகிறது.

## நெடுந்தீவில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப்பகுதியில் திருட்டுக்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

அண்மையில் 7ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜோசப்மரியதாஸ் என்பவரின் வீட்டில் சுமார் ரூபா 20,000 மதிக்கத்தக்க நகைகளும், பெறுமதிமிக்கபொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கடந்தவாரம் நெடுந்தீவு கிழக்கு 14ம் வட்டார அல்பிரட் என்பவரது வீட்டில் பெறுமதிமிக்க பிடவைகளும், வீட்டுத்தளபாடங்களும் திருட்டுப் போயுள்ளன.

## குடிநீர் பெறுவதில் சிரமம்

(நெடுந்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள விசுவமடுக்குளம் மற்றும் புன்னை, நீராவி. பிரமந்தன் ஆறு பகுதியில் கடும் வரட்சி நிலவுவதால் அப்பகுதி மக்கள் குடிநீர் பெறமுடியாது கஷ்டத்துக்குள்ளாகி வருகின்றூர்கள்.

சில இடங்களில் இருபத்தைந்து, முப்பது அடி வரையில் கிணறுகள் ஆழமாக்கப்பட்டபோதும் தண்ணீர் பெற முடியாதுள்ளது எனறும் தெரியவருகிறது.

## திருத்தப்படாத நிலையில் வீதி

(பண்டத்தரிப்பு)

சங்கானையிலிருந்து மாகியப்பிட்டி, அளவெட்டி ஆகிய இடங்களுக்கு ஊடாக மல்லாகம் செல்லும் பிரதான வீதி நீண்டகாலமாக திருத்தப்படாது குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு மிகவும் கஷ்டமான நிலையில் உள்ளது

ஆறு மாதத்திற்கு முன்னர் திருத்துவதற்காககற்கள் பறிக்கப்பட்டும் இதுவரை இந்த வீதி திருத்தப்படவில்லை என்று பொதுமக்கள் புகா தெரிவிக்கின்றனர்.

## பனைவள அபிவிருத்தி திட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்திற்கெனப் பிரத்தியேகமான பனைவள அபிவிருத்தித் திட்டமொன்றை இலங்கை பனை அபிவிருத்திச் சபை தயாரித்து வருகின்றது

இப்பாரிய பனை அபிவிருத்தித் திட்டம் மூன்றுண்டுத் திட்டமாக அமைந்துள்ளது.

இத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குச் சுமார் 75 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இதற்கான நிதி பிரதேச அபிவிருத்தி அமைச்சிடமிருந்தும், அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் பெறப்படவுள்ளது என்றும் இலங்கை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் க. நடராசா தெரிவித்தார்.

## உ. அரச அதிபருக்கு புகார்

(அரியாலை)

யாழ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் கடந்த ஏப்ரல் மாதத்திற்குரிய கடற்றெழிலாள நிவாரண அட்டைக்கான உணவுப்பொருள்கள் இன்னும் வழங்கவில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

இதைவிட மேலும் இரண்டு மாதத்திற்கு சடற்றெழிலாளர் குடும்பங்களுச்கு நிவாரணப் பொருள்கள் வழங்குமாறு அரசாங்கம் அறிவித்திருந்தும அப்பொருள்களும் இன்னமும் வழங்கப்படவில்லை என்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ் உதவி அரசாங்க அதிபருக்கு பாதிக்கப்பட்ட மக்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

## தென்னிந்திய திருச்சபை உதவி

(நெடுந்தீவு)

தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு தன்னல் முடிந்த அளவு நிதி உதவி செய்வதாக நெடுந்தீவுக்கு அண்மையில் விஜயம் செய்த தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் பேராயர் அருட்திரு டி. ஜே. அம்பலவாணர் தம்மைச்சந்தித்த நெடுந்தீவு பிரஜைகள் குழுச் செயலாளர் புலவர் ஏ. டபிலயு அரியநாயகத்திற்கு உறுதிமொழி வழங்கினர்.

குமுதினிப்படு கொலையில் சிக்கிய குடும்பங்களுக்கும், அவர்களுக்கு ஞாபகஸ்தூபி அமைப்பிற்கும் பேராயர் அதிகளவு நிதி ஏற்கனவே வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## தே இ சே. மன்ற பத்திரிகையாளர் மகாநாடு

(மண்டைதீவு)

தேசியஇளைஞர் சேவைகள் மன்றத்தின் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வடக்குகிழக்கு மாகாணஇளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது செயல்படுத்துவது தொடர்பான பத்திரிகையாளர்மாநாடொன்றை நடத்துவதற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஏற்பாடு செய்துள்ளது

நாளை முதலாம் திகதி கிளிநொச்சியில் உள்ள தேசிய இளைஞர் சேவைமன்றப் பயிற்சிநிலைய மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இமகா நாட்டில் தேசிய இளைஞர்கள் மன்றப் பணிப்பாளர் நாயகம் சரத்ரத்வத்தை பிரதம பேச்சாளராக கலந்து கொள்ள விருககின்றூர்.

இம்மகாநாட்டுக்கான அழைப்பிதழ் சகல பத்திரிகைகளுக்கும் செய்தி நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## சுந்தரர் குருபூசை

[உடுவில்]

உடுவில் சிவஞானப்பிள்ளையார் ஆலயத்தில் சுந்தர மூர்த்திநாயனுர் குருபூசை கொண்டாடப்பட்டது.

மாணவர்களுக்கான மனனப் போட்டிகள், இடம்பெற்றன. சுந்தரர் பெருமைகள் பற்றி ஆசிரியர் எஸ். ஸ்ரீதயாளன், சிவாஞனவாரிய உபதலைவர் எஸ். செல்லையா, செல்விகள் பு. தயாளினி, அ ஆஜந்தா, செல்வன் அ. அரவிந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

## இசை நிகழ்ச்சிகள்

(மண்டதீவு)

நாட்டில் இருந்து வந்த அமைதியற்றநிலை காரணமாக கடந்த சிலவருடங்கள் நடைபெறுமல் இருந்துவந்த அண்ணமலை இசைத் தமிழ்மன்றத்தின் இசைநிகழ்ச்சிகள் அடுத்த மாதம் முதல் நடைபெறஇருப்பதாக இம்மனறம் அறிவித்துள்ளது.

மாதம்தோறும் ஒவ்வொரு இசைக்கச்சேரி நிகழ்ச்சியை நடாத்துவதென்றும் அண்மையில் கூடிய இம்மன்றத்தின் ஆட்சிக்குழு முடிவு செய்தது.

இந்தமாதாந்த இசை நிகழ்ச்சிகளை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடத்துவதென்றும், இக் கச்சேரியின் தொடரில் முதலாவது இசைக்கச்சேரியை சங்கீத பூசணம் எஸ். பாலசிங்கம் நடத்துவார் என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# "ஈழம் கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்

(கிளிநொச்சி)

"எமது போராட்டம் ஒரு சிலரால் காட்டிக்கொடுக்கப் பட்டுள்ளது. இதனுல் எமது போராட்டப்பாதையில் சில தடைகள் ஏற்பட்டுள்ளன. தமிழ் ஈழவிடுதலைப் புலிகளா கிய நாம் தமிழ்ஈழம் கிடைக் கும் வரை தொடர்ந்துபோரா டியே தீருவோம்"

இவ்வாறு கிளிநொச்சி கர டிப்போக்குச் சந்தியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க அலு வலகத் திறப்புவிழா வைபவத் தில் தலைமையுரை ஆற்றுகை யில் கிளிநொச்சிப் பிரதேச புலிகளின் அமைப்பாளர் மூர்த்தி குறிப்பிட்டார்.

பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட இத்திறப்பு விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில், எமது போராட் டப் பாதையில் இன்று முக்கிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. எம்மீது வலுக்கட்டாயமான திணிப்பொன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது.

கடந்த போராட்டங்களின் போது அறுநூற்றியிருபது போராளிகளையும் பெருந் தொகையான பொதுமக்களை யும் நாம் இழந்து நிற்கின்றேம். இன்று எம்மிடம் ஆயுதம் இல் லாவிட்டாலும் மன உறுதியு டன் எமது லட்சியப் பயணம் தொடரும் என்றுகூறியஅவர், எத்தனையோ தாய்மார்கள் தமது பிள்ளைகளை இப்போரா ட்டத்தின் மூலம்இழந்து நிற் கின்றனர் இந்த நிலையில் எமது இலட்சியத்தை கைவிட முடியாது என்ருர்.

தமிழீழவிடுதலைப் புலிகளின் அலுவலகத்தை மறைந்த போராளிகளின் தாய்மார்கள் திறந்துவைத்தனர். ரஞ்சன் மாமாவின் தாயார் திருமதி இலட்சுமி பொன்னையா, வேதாவின் தாயார் திருமதி தெய்வானை கனகு, காத்தா னின் தயார் திருமதி பூபதி துரைசாமி ஆகியோர் திறந்து வைத்தனர்.

இறுதியாகபரந்தன்களத்தில் பலியான குமாரதாஸின்படத் திற்கு போராளிகள் மாலை சூட்டினர்.

## அச்சுவேலி லயன்ஸ் கழகம் கோரிக்கை

(அச்சுவேலி)

அச்சுவேலி, பத்தமேனி, இடைக்காடு பகுதிகளில் இரா ணுவ நடவடிக்கையினுல் பாதிப்புக்கு உள்ளாகியவர்கள் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக் கள் சேதம் தொடர்பான விப ரம் அடங்கிய சத்தியக்கூற்று சான்றிதழை அச்சுவேலி லயன் கழகத்திடம் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி லயன் கழகத்தின் செயலாளர் திரு. வி சுவாமி நாதன் இதுபற்றி கருத்து தெரி விக்கையில் லயன் கழகத்தின் மூலம் நிவாரண உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு வாய் ப்புகள் இருப்பதால் அச்சுவேலி கோவில்பற்று பகுதியில் இரா ணுவநடவடிக்கையினுல் பாதிப் புக்கு உள்ளாகிய மக்கள் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக் களை சத்தியக்கூற்று சான்றிதழ் மூலம் செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் லயன்கழகத் திடம் சமர்ப்பிக்குமாறு கூறி ஞர்.

## வளலாய் வீடமைப்புப் பணியில் விடுதலைப் புலிகள்

(யாழ்ப்பாணம்)

வளலாயில் இலங்கை ராணு வத்தினரின் நடவடிக்கையினுல் வீடிழந்த அனைவருக்கும் தற் காலிக வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடு களை விடுதலைப் புலிகள் மேற் கொண்டிருக்கின்றனர்.

வளலாயில் ராணுவ நடவ டிக்கையின் போது பெரும் பாலான வீடுகள் புல்டோஸர் கொண்டு உடைக்கப்பட்டும் தீயிட்டும் சேதமாக்கப்பட்டி ருந்தன.

இதனுல் அங்கிருந்தும் அகதி களாக வெளியேறிய மக்கள் தற்போதும் அங்குள்ள பாட சாலைகளிலும், கோவில்களி லும் தங்கியுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை முதல் பாடசாலைகள் ஆரம்பிக் கப்படவுள்ளதால் பாடசாலை களை விட்டு உடன் வெளியேறு வதற்காக இவ்வீடு கட்டும் பணி அவசரமாக மேற் கொள்ளப்பட்டுள்ளது.

வளலாய் கலைக்கதிர் சன சமூக நிலையமும், வளலாய் சனசமூக நிலையமும் இணைந்து பாதிக்கப்பட்டோர் புனர் வாழ்வுக் கழகம் என்ற பெயரில் விடுதலைப் புலிகளின் முயற்சிகளுக்கு உதவியுள் ளன. (கு)

## அராலி இந்து நூல்நிலையம்

(அராலி)

அராலி இந்துக் கல்லூரி யின் நூல்நிலையம் பலவருடங் களாக பல வசதிக்குறைவுகள் காரணமாக இயங்க முடியா திருந்தது.

தற்போது இந்நூல் நிலையத் தைப் புனரமைப்பதற்கு என ஒருகுழு நியமிக்கப்பட்டுமாண வர்கள் பயனடைய வழிவகுக் கப்பட்டுள்ளது. இன்றும் சில வசதிக்குறைவுடனேயேஇயங்கி வருவதால் அக்கறையுடைய பழையமாணவர்கள்பெற்ருேர் கள் மற்றும் நலன்விரும்பிகள் தங்களால் இயன்ற நூல்கள், சஞ்சிகைகள், தளபாடங்கள் போன்ற உதவிகளை நல்குமாறு பாடசாலையின் அதிபர் திரு. சி. தாஸ் கோரிக்கைவிடுத் துள்ளார்.

தேவை

லக்ஸ்பிறே பிரதிநிதிகள்

லக்ஸ்பிறே விநியோகம் செய்வதற்கு, பின்வரும் பிரதேசங்களில், உள்ளூர் முன்னணி வியாபாரிகள், லங்கா மில்க் ஃபுட்ஸ் நிறுவனத்தின் கையிருப்பாளர்-களாகத் தேவை

- மட்டக்களப்பு,
- வாழைச்சேனை,
- செங்கலடி,
- கந்தளாய்,
- மூதூர்,
- கிளிநொச்சி,
- முல்லைத்தீவு.

நாட்டம் உள்ளோர், தயவு செய்து உங்கள் வர்த்தக நிறுவனத்தின் சுருக்கமான விபரத்துடன் வர்த்தகப் பதிவுப் பத்திரத்தின் போட்டோப் பிரதி ஒன்றை இணைத்து விற்பனை மனேஜருக்கு எழுதுங்கள்

விற்பனை மனேஜர்,
லங்கா மில்க் ஃபுட்ஸ் (சீடபிள்யூஈ) லிமிடெட
வெலிசறை ருகம

ZENITH

## வெற்றிலைச் செய்கை புனரமைக்6 நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

வலி வடக்கில் பாதிப்புற்ற வெற்றிலைச் செய்கையை புன ரமைக்க அகதிகள் புனர் வாழ்வுக்கழகம் உதவ இருக் கிறது.

அண்மையில் இடம்பெற்ற ராணுவ நடவடிக்கையால் இப் பகுதயில் பல லட்சம் வெற்றி லைக் கொடிகள் கருகி அழிந் துள்ளதால் விவசாயிகள் பெரி தும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் நிலை குறித்து வலி. வடக்கு பிரஜைகள் குழு ஒன்றியம் அகதிகள் புனர் வாழ்வுக் சழகத்தின் கவனத் திற்கு கொண்டு வந்ததை யடுத்து இவற்றை புனரமைக் கும் செயல் திட்டம் ஒன்றை தயாரித்து அதன் அடிப்படை யில் உதவ அகதிகள் புனர் வாழ்வுக்கழகம் முன்வந்துள் ளது.

இப்பகுதியில் தூர்ந்து போய் உபயோகிக்க முடியாதுள்ள கிணறுகளை திருத்தவும் அகதி கள் புனர்வாழ்வுக்கழகம் உதவ முன்வந்துள்ளது.

## நாடு திரும்பினுர்

(யாழ்ப்பாணம்)

பிரபல ஆஸ்மா நோய் சிகிச்சை நிபுணரான டாக் டர் சுருஸ் சோமசுந்தரம்நாடு திரும்பியுள்ளார். ஆஸ்மா நோய் கிகிச்சைக்கான விஷேட பயிற்சி பெறுவதற்காக இவர் இந்தியா சென்றிருந்தது குறிப் பிடத்தக்கது.

NEW MASTER INSTITUTE

B M. C. Lane, Jaffna,
241, Navalar Road, Jaffna.

88 A/L DAY CLASS

பிரிவு: I ஆரம்பம்:- 01-09-1987
செவ்வாய் காலை 8.30 மணி

எமது வழமையான ஆசிரியர்குழு:

Physics – திரு. சத்தியசிலன்
Chemistry – திரு மக்லி
Botany – திரு. செல்வநேசன்
Zoology – திரு. நாகநாதன்
Pure & Applied Maths – திரு. A. பத்மநாதன்

8 30 – 9.30 - Physics
9.30 – 10.30 - Chemistry
10.30 – 11.30 - Zoology
11.30 – 12.30 - Botany
10.30 – 11 30 : PURE & APPLIED MATHS
11 30 – 12.30 :

பிரிவு; II ஆரம்பம்:
19-09 87 காலை 8.30 மணி

88, 89 A/L WEEKEND CLASS நடைபெறுகின்றன.

எமது வழமையான ஆசிரியர் குழு

Physics - திரு. வர்ணம்
Chemistry - திரு. தில்லைநாதன்
Botany - திரு. குகாதரன்
Zoology - திரு. நாகநாதன்
PURE APPLIED MATHS - திரு. நல்லையா

88 A/L

7.30- 8.30 - Physics வெப்பவியல்
8.30- 9.30 - Botany - நுண்ணங்கி உலகம்
9 30-11 30 - Zoology - நரம்புத்தொகுதி
11 30-12 30-Chemistry-சேதன இரசாயனம்
12 30- 1 30-Physics - வெப்பவியல்
1 30-2 30-Botany - தாழ்வகைத்தாவரம்
2 30-4 30-Zoology - முளையவியல்
9.30-11.30 - Pure & Applied Maths

89 A/L

7.30- 9 30 - Zoology - தொகுதிகள்
9 30-10 30 - Botany–
10 30-11.30 - Chemistry - பொது இரசாயனம்
11.30-1230 - Physics - ஒளியியல்
12 30-1 30 - Botany - உருவவியல்
1 30-2 30 - Zoology - தொகுதிகள்
1.00-3.00 - Pure & Applied Maths

[எ 2115]

மானிப்பாய் கோவில் பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

## பதவி வெற்றிடம்

### தற்காலிக கிளை முகாமையாளர்

சங்க எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு முகாமையாளருக்கான விண்ணப்பங்கள் 10-09-87 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்படிவங்கட்கும், தகைமைகள் பற்றிய மேலதிக விடரங்கட்கும், சங்க காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
எ-2135

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்லையா ராசரத்தினம்

மலர்வு: 08-10-1939
உதிர்வு: 31-08-1984

திதி; 29-08-1987

குடும்பத்தின் விளக்கொன்று அணைந்தது குலத்தின் குரல் ஒன்று மறைந்தது. ஆனல் மறக்குமோ எம் நெஞ்சம் உங்களை. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். தங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.
[சி-0740]

## 31ம்– நாள் நினைவஞ்சலி



ச. மு. வேலுப்பிள்ளை
(சீனியர்)

தோற்றம்: 27-05-1920
மறைவு; 01-08-1987

கற்றோர் போற்ற கவின்
பெற வாழ்ந்து
உற்றார் பரிதவிக்க
உறவை மறந்தீர்
அற்றோம் எம் ஆதரவு
அற்றோம் அன்புத்
தெய்வமே (நின்)
பொற்றாள் என்றும்
மறவோம் யாமே.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்
பிள்ளைகள், மற்றும்
குடும்ப உறுப்பினர்.

அம்பிளா,
களபூமி,
காரைநகர். [சி-0722]

## பெண்கள் பயிற்சிநிலையம்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டதேசிய இளைஞர் சேவைகள்மன்றம் பெண்களுக்கான பயிற்சி நிலையமொன்றை செப்டம்பர் மாதம் 9ம் திகதி மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் ஆரம்பித்துவைக்கவுள்ளது.

இப்பயிற்சிநிலையப் பயிற்சி நெறியில் பயிற்சி பெறுவதற்குப் பெண்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் அதிகாரி எஸ். கார்த்திக் இப்பயிற்சி நிலையத்திற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார்.

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு கேள்வி விற்பனை

1. வெற்றுச்சாக்கு தொகை 2533
2. விண்ணப்பப்படிவம் ரூபா 5/-
3. மீளளிப்பு வைப்புப்பணம் ரூபா 300/-
4. முடிவுத்திகதி; 14-09-87 நண்பகல் 12-00மணி

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வெற்றுச் சாக்கு எனக்குறிப்பிட்டு தலைவர் நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கம், நெடுந்தீவு என்ற விலாசத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
நெடுந்தீவு. பல. நோ. கூ. சங்கம்,
நெடுந்தீவு. சி-2127

## 15-வது மாத நினைவஞ்சலி



செல்வி
ரஜினி பாலசிங்கம்
[சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி]

மலர்வு: 27-05-1969
உதிர்வு: 31-05-1986

ஒரு வருட காலமதாய்
ஓயாமல் அழுகின்றோம்
அழுது வடிந்த கண்ணீர்
ஆறாகப் பெருகுதம்மா.
உன்னைத் தெரிந்தவர்கள்
உன் புகழை உரைக்குங்
கால்
அடி வயிறு எரியுதம்மா
ஆறவே முடியவில்லை.
மகளே நீ இல்லாமல்
எங்கள் இதயம் தவிக்கின்
றது
நீ இல்லாத இடம்
நிரப்பமுடியாதது என்பதை
மனது உணர்கின்றது-
ஏனோ
எங்கள் இதயங்கள் ஏங்கு
கின்றனவே.

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்: அப்பா, அம்மா, தம்பி ரஞ்சித், உறவினர்கள், நண்பர்கள்.

71, இரண்டாம் குறுக்
குத் தெரு,
யாழ்ப்பாணம்.
சி-0732

## புதிய மின் மாற்றிகள்

(பலாலி)

பலாலி சந்திக்கு அருகாமையிலும், பலாலி ராணுவ முகாமுக்கு அருகாமையிலும் இரு புதிய மின்மாற்றிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இலங்கை ராணுவத்தினரின் நடவடிக்கையால் இப்பகுதி மின்மாற்றிகள் பலத்த சேதத்துக்கு உள்ளாகியதனல் பலாலிப் பகுதி கடந்த சில மாதங்களாக இருளில் மூழ்கியது தெரிந்ததே.

## உடுபுடவை அன்பளிப்பு

[சுண்டுக்குளி]

மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகத்தினர் அப்பகுதியில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு கடந்த வாரம் உடுபுடவைகளை அன்பளிப்புச்செய்தனர்.

சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் லயன்ஸ் தலைவர் எஸ். பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபத்தில் சுமார் 40க்கு மேற்பட்ட குடும்பத்தினர் மேற்படி அன்பளிப்புப் பொருட்களைப் பெற்றுச்சென்றர்.

## பொருள் மீட்புக்கு அமைதிப்படை நடவடிக்கை

(நெடுந்தீவு)

இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட உடமைகளின் சரியான அத்தாட்சியை அவ்வவ்பகுதிஉதவி அரசாங்க அதிபரின் உறுதியுடன் ஊர்காவற்றுறையிலுள்ள எமது பணிமனைக்கு கிழமை நாட்களில் கொண்டுவந்து ஒப்படைப்பின் உடமைக்கு உரியவரை சம்பந்தப்பட்ட முகாமிற்கு அழைத்துச் சென்று சம்பந்தப்பட்ட பொருள்தான் என நிரூபிக்கப்படின் இலங்கை அரசுடன் தொடர்புகொண்டு உரியபொருளை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு இந்திய சமாதானப் படையின் ஊர்காவற்றுறைப்பகுதி தளபதி மேஜர் ஜே சி. ஜோசி தெரிவித்துள்ளார்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
ஜெயவதி
அருளானந்தன்
(ஜெயா)

இயேசுவின் கரத்தில்:
31-08-1985

என்றும் உமது நினைவோடு வாழும் கணவன் ஹரி அருளானந்தன், மைத்துனிமார், மருமக்கள்மார்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.
[சி-0714]

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## மிளகாய்ச் செய்கைக்கு காப்புறுதித்திட்டம் அறிமுகம்

(அச்சுவேலி)

யாழ். மாவட்டத்தில் மேட்டுநில மிளகாய்ச் செய்கைக்கு இவ்வருடம் தொடக்கம் காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேட்டுநில மிளகாய்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை ஈடுசெய்யும் நோக்குடன் இந்தத்திட்டம் யாழ் மாவட்டத்திலும் அறிமுகப்படுத்தப்படுகிறது.

மிளகாய்ச் செய்கை காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்துகொள்ளும் விவசாயிகள் தாம் காப்புறுதி செய்யும் தொகையின் ஆறில் ஒரு பங்கைகாப்புறுதிக்கட்டுப்பணமாகசெலுத்தவேண்டும்.

காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்துகொள்ளும் விவசாயிகள் நாற்று மேடை பயிர்ச் செய்கை நடைமுறைராமரிப்பு என்பனவற்றை பதிவுசெய்வதுடன் கமநலசேவை திணைக்கள அதிகாரிகளின ஆலோசனைப்படி பயிர்ச் செய்கையை மேற்கொள்ள வேண்டும்.

பயிர்ச்செய்கையில் எதிர்பார்த்த விளைச்சல் ஏற்படாமல் நட்டமேற்பட்டால் அதிகாரிகளின் சிபார்சுடன் குறுகிய காலத்தில் காப்புறுதிமூலம் நட்டஈட்டை பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டில் இன்றி நோயாளர் அவதி

[புங்குடுதீவு]

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் பெருந்தொகையான நோயாளர்கள் கட்டில்கள் இன்றிபெரும் அவஸ்தைக்குள்ளாகி வருகின்றனர்.

வைத்தியசாலையில் உள்ள பலகட்டில்கள் உடைந்த நிலையில் பாவிக்க முடியாதவாறு அங்குள்ள அறைகளில் குவிந்து கிடப்பதை காணமுடிகிறது.

## நவீன சந்தை கட்டிட வேலைகள் ஆரம்பம்

[அசசுவேலி]

அச்சுவேலி நவீன சந்தை கட்டிட வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

நவீன சந்தைக் கட்டடிடத்தின் கீழ்மாடியில் வர்த்தக நிலையங்களும், மேல்மாடியில் அலுவலகங்களும் செயற்படுவதற்கு வசதியாகவும் கட்டிடம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## கொத்தணி அமைப்பு

[அச்சுவேலி]

கோப்பாய் கல்வி வட்டாரத்தில் நான்கு கொத்தணிப் பாடசாலைகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மிக விரைவில் மேலும் இரண்டு கொத்தணிப் பாடசாலை அமைப்புக்கள் செயற்படவுள்ளன

கோப்பாய்க் கல்வி வட்டாரம் அச்சுவேலி கொத்தணி, புத்தூர் கொத்தணி. வசாவிளான் கொத்தணி, உரும்பிராய் கொத்தணி, நீர்வேலி கொத்தணி, கோப்பாய் கொத்தணி என ஆறு கொத்தணி அமைப்புக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

செயற்படாமலிருக்கும் புத்தூர் கொத்தணிப் பாடசாலை அமைப்பும் உரும்பிராய் கொத்தணிப் பாடசாலை அமைப்பும் மிக விரைவிற் செயற்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

## கடலில்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் சென்று மீன்பிடிக்கலாம். உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க எமது கப்பல்களும் படகுகளும் வெள்ளைக் கொடி பறக்கவிட்டபடி ஆங்காங்கே நிலைகொண்டுள்ளது அவை உங்களுக்கு எவ்வேளையிலும் உதவிக்கரம் நீட்டும்என்ருர்.

### கந்தவனம் ஸ்ரீசுப்பிரமண்ய சுவாமி கோவில் சம்புரோக்ஷண பிரயச்சித்த கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அடியார்கள்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் பிரபவ வருஷம் ஆவணி மீ 19ந் உ (4-9-87) ஏகாதசி த்திதியும் உத்தராட நக்ஷத்திரமும் சேர்ந்த வெள்ளிக்கிழமை காலை 6-10 மணிக்கு மேல் 7 மணிக்குள் வரும் சிம்ம லக்ன சுபமுகூர்த்தத்தில் சம்புரோக்ஷண பிராயச்சித்த கும்பாபிஷேகம்திருவருளை முன்னிட்டு நடைபெறும். அடியார்கள் வந்து தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெறுக.

செ, யோகேந்திரன்,
சி-0750 பரம்பரை ஆதீனகர்த்தா.

## நற்செய்தி

"HILTON RADIOS" ஸ்தாபனத்தார்
வாடிக்கையாளர்களுக்குத் தரும் நற்செய்தி

எமது ஸ்தாபனத்தால் புதிதாகத் தருவிக்கப்பட்ட "SHARP" SF 8100 (Fully Computerised) உங்கள் திருப்திக்காக இயங்குகிறது. உங்கள் சகலவிதமான தஸ்தாவேஜுக்கள் (வீட்டுப் படங்கள், Passport) மற்றும் பிரதிகளை பெரிதாகவும் (Enlargement) சிறிதாகவும் (Reducement) சிறந்தமுறையில் தெளிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் ஆங்கில தட்டெழுத்து வேலையும் செய்து கொடுக்கப்படும்.

544, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
[ஆஸ்பத்திரி வைரவர் ஆலயம் முன்பாக]
[சி-0749]

# மன்னார் செய்திகள்

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்பின்னர் இந்தியாவிலிருந்து இலங்கை அகதிகளின் வருகை நல்லமுன்னேற்றம் அடைந்துள்ளது கடந்த வாரம் 445 அகதிகள் தலைமன்னார் இறங்குதுறையை வந்தடைந்தனர்.

## கரையொதுங்கிய திமிங்கிலம்

மன்னார் ஓலைத்தொடுவாய் கடற்கரையில் ஏறக்குறைய 45அடி நீளமான பெரிய திமிங்கிலம் ஒன்று இறந்து கரை அடைந்துள்ளது. இதன் தலையில் பாரிய காயங்கள் காணப்பட்டன. மக்கள் கூட்டம் தினமும் ஓலைத்தொடுவாய் கடற்கரைக்கு படையெடுத்த வண்ணமுள்ளது.

## செஞ்சிலுவைச் சங்கம் உதயம்

மன்னார் கச்சேரி மண்டபத்தில் அண்மையில் செஞ்சிலுவைச்சங்கம் உதயமாகியது இதற்கு மன்னார் அரசாங்க அதிபர் ஜனாப் எம். எம். மக்பூல் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

## மன்னாரில் புலிக்கொடி

மன்னார் மாவட்டம் முழுவதும் புலிக்கொடிகள் பறந்த வண்ணமே உள்ளன. மன்னார் நகரத்தில் கச்சேரி மீன்சந்தை தண்ணீர்தாங்கி போன்ற இடங்களில் பிரதானமாக பறக்கவிடப்பட்டுள்ளன.

# இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி 15 (1987 8-31)
கிழமை; திங்கள்
திதி: ஸப்தமி மு.இ. வரை
நக்ஷத்திரம்: விசாகம் மு. ப வரை.

மேடம்: வாய்வுக்கோளாறுகளுக்கு இடமுண்டு. உணவு விடயங்களில் சுகாதாரம் வேண்டும், ஆயுதங்களுடன் பழகுபவர்கள் கவனம் வேண்டும், கருத்துமோதல்களும் உண்டு.

இடபம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும் பொருள்நிலையில் மந்தம் ஏற்படும், அவசரப்படுவதால் அருமையான சந்தர்ப்பத்தைதவற விடலாம்.

மிதுனம்; எண்ணித் துணியும் விடயங்களில் எதிர்பாராத தடையும், பொருள்குறைவால் மனக்குறையும் ஏற்பட இடமுண்டு. இன்று எவ்விடயத்திலும் அமைதியே நன்று

கடகம்; மனம்போலவாழ்வு இன்று மலரும், கடமையாற்றுமிடத்தில் ஒத்துழைப்புகிடைக்கலாம் முன்னேற்மான தினம்

சிங்கம்: துணிச்சலுடன் காரியங்களைச்சாதிப்பீர்கள், சிலருக்கு பொதுசனத்தலைமைக்கும் இடமுண்டு விவசாயிகள் வாழ்வில் முன்னேற்றம் மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வமும் உண்டு.

கன்னி: வாழ்க்கையில்புதிய அபிவிருத்தி தென்படும் சுற்றாடலில் உற்சாகமான வரவேற்பு கிடைக்கும், வருவாயுமுண்டு.

துலாம்: எதிலும் தடுமாற்றம் ஏற்படும் வியாபாரத்துறையில் மந்தநிலை காணப்படும் உடல்நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

விருச்சிகம்: மனதில் அமைதி குன்றும், எதிர்பார்த்த விடயங்களில் தடைகள் ஏற்படும்,

(10ம்பக்கம் பார்க்க)


## பிரயாண ஒழுங்குகள்
### பதவி வெற்றிடம்–குவைத்

வீதி வேலைக்கான பின்வரும் வேலையாட்கள் உடன் தேவைப்படுகிறார்கள். இரண்டு வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலை வழங்கப்படும். மேலும் இரு வருட நீடிப்பும் வழங்கப்படும். மொத்தமாக 4 வருட வேலை வாய்ப்பு உண்டு.

சம்பளம் மாதா மாதம் நாளொன்றுக்கு 9½ மணி நேர வேலைக்கான K.D

| | | |
|---|---|---|
| வேலையாட்கள் | - | 36 |
| தச்சுத்தொழிலாளர் | - | 45 |
| உலோகத்தொழிலாளர் | - | 42 |
| ஒட்டுநர்கள்: | | |
| [Roller, Loader, Scraper Grader, Dozer | - | 60 |
| கனரக வாகன சாரதி | - | 54 |
| நில அளவையாளர் | - | 90 |
| பட வரைஞர்கள் | - | 74 |

[1 KD= ரூபா 1.06]

நேரடியாக விண்ணப்பிக்கவும்.

தேக ஆரோக்கியமுள்ள திடமானவர்கள் மட்டும் கடின வேலைகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

உணவு, குளிர்சாதன இருப்பிட வசதி, மருத்துவ வசதி வழங்கப்படும்.

விண்ணப்பதாரி 05-09-87க்கு முன் கடவுச்சீட்டு மற்றும் தஸ்தாவேஜுக்களுடன் நேரில் சமுகம் தரவும்.

1987 செப்டம்பர் மாதம் குவைத்தில் வேலைகள் ஆரம்பமாகும்.

முகவரி:

**Construction & Development Co. Ltd**
37, S de S JEYASINGHE MAWATHA,
NUGEGODA.

[எ-0730]



## இடமாற்றம்
கொழும்பு ஸ்ருடியோ
ஸ்ரான்லி வீதி
**20–08–87 முதல்**

[வெலிங்டன் சந்திக்கு வடக்கே] 55, மணிக் கூட்டு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஏ-2086



கலர் பிலிம் சுருள்களை இரண்டு நாட்களில்
PROCESSING & PRINTING
நவீனமுறையில் செய்து தருபவர்கள்.

## கொழும்பு ஸ்ருடியோ
55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[5] ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் கலர்பிலிம் சுருள் இனம். ஏ2084



## பை Fவ் ஸ்ரார் கொம்பனி
சங்கானை

எமது புதிய நிறுவனத்திற்கு
இரும்புப் பொருட்கள், மின்சாரப் பொருட்கள்
விற்பனை கொள்முதலில் அனுபவமுள்ள ஒருவர்
உடனடியாகத் தேவை.
நேர்முகத் தேர்வுக்கு தொடர்புகொள்ளவும்.

## பைFவ் ஸ்ரார் கொம்பனி
பிரதான வீதி, சங்கானை.

(எ - 2130)



## தேவை
மிது வீடியோ மூவிஸ் நிறுவனத்தை
நிர்வகித்து நடத்தக்கூடிய
திறமையுள்ள மகளிர் ஒருவர் தேவை.
உடன் விண்ணப்பிக்கவும்.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

## மிது வீடியோ மூவிஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி.

(எ - 2131)



இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
## காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை
## காங்கேசன்துறை

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையிலிருந்து சீமெந்துப் பொதிகள் ஏற்றி யாழ்ப்பாண புகையிரத நிலையத்திலுள்ள RAILWAY WAGON புகையிரதப் பெட்டியில் ஏற்றுவதற்கான

# கேள்விப்பத்திரம்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் இருந்து சீமெந்துப் பொதிகளை லொறிகள் மூலம் யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்குக் கொண்டு சென்று புகையிரதப் பெட்டிகளில் ஏற்றுவதற்கு கேள்விப்பத்திரங்கள் லொறிச் சொந்தக்காரர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

மேற்படி கேள்விப்பத்திரங்கள் விநியோக உத்தியோகத்தர் காரியாலயத்தில் கிழமை நாட்களில் காலை 8-00 மணி தொடக்கம் மாலை 4-00 மணிவரையும் மீளப்பெற முடியாத வைப்புப்பணமாக ரூபா 50/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 1987–09-03ம் திகதி மாலை 4-00 மணிவரை விநியோகிக்கப்படும்.

கேள்விப்பத்திரகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1987-09-04ம் திகதி காலை 10-30 மணிக்கு கோள்விப்பத்திரகாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

இங்ஙனம் உண்மையுள்ள,
**இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்.**
தொழிற்சாலை முகாமையாளர்,
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.

ஏ-2137



## (Gelato Roma)
## ஜெலாற்றோ றோமா
## விநியோக முகவர்கள்
## தேவை

இத்தாலிய தொழில்நுட்பத்தில் தயாரான ஜெலாற்றோ றோமா (GELATO ROMA) என்னும் புதிய இத்தாலிய ஐஸ்கிறீம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது.

ஜெலாற்றோ றோமாவை கீழ்க்காணும் இடங்களுக்கு பெரிய அளவில் எடுத்துச் செல்லக்கூடிய குளிர்சாதன வண்டி வசதியுடைய விநியோக முகவர்கள் தேவை:

யாழ்நகரம், காங்கேசன்துறை / தெல்லிப்பழை,
சாவகச்சேரி, வவனியா,
திருகோணமலை, மட்டக்களப்பு,
கல்குடா,

அத்துடன் மீஜீ (Meiji) குழந்தைகள் பால்மா விநியோகஸ்தர்களும் தேவை.

முழுவிபரங்களுடன் 4-9-87ற்குமுன்

**Gelateria Roma,**
424, UNION PLACE, COLOMBO-2
என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

[எ-2141]

இராணுவ நடவடிக்கை காலத்தில்------

# காங்கேசன் மருந்தகத்தில் உபகரணம், மருந்து திருட்டு

[பண்டத்தரிப்பு]

காங்கேசன்துறை அரசினர் மத்திய மருந்தகத்தில் சுமார் 5,000 ரூபா பெறுமதியான மருந்து வகைகளும்,உபகரணங்களும் சூறையாடப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் ஏற்பட்ட ராணுவத் தாக்குதலின் போது இந்த மருந்தகத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு மருந்து வகைகளும் மற்றும் உபகரணங்களும் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. அப் பகுதியில் இந்திய ராணுவத்தினரின் வருகையை அடுத்து அமைநிலை ஏற்பட்டதும் மேற்படி மருந்தகத்தைப் பார்வையிடச் சென்ற வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிடாக்டர் ரி.எஸ் இராசேந்திரம் மருந்துக் களஞ்சியம் உடைக்கப்பட்டு அங்கிருந்த மருந்துகள் பலவும்,உபகரணங்களும் காணுமல் போய்விட்டதையறிந்து இது பற்றி யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு முறையிட்டார்.

இதனை அடுத்து சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று அங்கு சென்று காணுமல் போன பொருள்கள் பற்றிய மதிப்பீட்டை மேற்கொண்டது.

5,000 ரூபாவுக்கு மேற்பட்ட மருந்து வகைகளும், உபகரணங்களும் திருடப்பட்டுள்ள தாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## வாக்காளர் பட்டியல்

(பலாலி)

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல தேர்தல் தொகுதிகளிலும் 1987ம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் திருத்த வேலைகள் மிகவேகமாக நடைபெற்றுவருகின்றன.

## ஓய்வூதியத்திட்டம்

[அச்சுவேலி]

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கும் ஓய்வூதியத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

விவசாயிகளின் நன்மையை கருத்தில் கொண்டு நடைமுறைப்படவிருக்கு ஓய்வூதியத் திட்டத்தை சிறப்பானமுறையில் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

# இடமாற்றம் பெற்ற ஊழியர் மீண்டும் பழைய இடத்துக்கு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் கடமை புரிந்து பின்னர் வேறு இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் மீண்டும் இப்பகுதிகளுக்குச் சென்று கடமையாற்றவுள்ளனர். இம்மாகாணங்களில் இடம்பெறவுள்ள புனர்நிர்மாண, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு உதவவெனவே இவர்கள் மீண்டும் இப்பகுதிகளுக்குச் சென்று கடமையாற்றவுள்ளதாக புனர்வாழ்வுஅமைச்சின் செயலாளர் திரு ஒஸ்ரின் பெர்ணுன்டோ தெரிவித்துள்ளார். இப்பகுதிகளில் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கென உப அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### காமினி வேண்டுகோள்

இதேவேளை வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வன்செயல்களினல் இடம்பெயர்ந்த மக்கள் திரும்புமுகமாக புனர்நிர்மாண, புனர்வாழ்வு நடவடிக்

(11ம் பக்கம் பார்க்க)

# இந்திய-இலங்கை

[4ம் பக்கத் தொடர்ச்சி]

மாகாணங்கள், தற்போது அமைந்துள்ளதுபோன்று ஒரு நிர்வாகப்பிரிவாக அமையும்', என்று காட்டப்படடுளளது. (2 2ம் பந்தி' அதே மாகாணத்தைக் குறிப்பதாலும், புதிய கிழக்கு மாகாணம் என்று பொறிக்கப்படாமையாலும் அம்பாறை மாவட்டத்தைப் பிரிப்பதை அரசு கைவிட்டுவிட்டதா? என்று நாம் கேட்கலாம்.

அல்லது வாக்கெடுப்பில் அம்பாறை மாவட்டத்திலுள்ள சிங்கள மக்கள் கலதுந் இணைப்புக்கு மாருக வாக்களிக்க ஒரு தருணத்தை உண்டுபண்ணுவதற்காக அரசு அம்பாறையைப் பிரித்தெடுக்கும் யோசனையைத்தற்காலிகமாகக் கைவிட்டுவிட்டதா என்று நாம் ஊகிககவேண்டியுள்ளது. காரியத்தைச் சாதித்தபின்பு மீண்டும் அம்பாறையைப் பிரித்தெடுக்க அரசு முயலவும்கூடும்! இது ஒரு யுக்தியோ என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது. தமிழர்கள் வாக்கெடுப்புக்கு தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதுமல்லாமல், தமிழ்பேசும் மக்கள் தமது எதிர்காலப்போக்கை நிர்ணயிக்கும்போது இனத்துவேஷமுள்ள சிங்கள மக்கள் குறுக்கீடு செய்து, தமது அதிகாரத்தைத் தூர்ப்பிரயோகஞ் செய்து அவர்களது தீர்மானத்தைப பாழ்படுத்துவது ஜனநாயகத்துக்கு விரோதமானதும், அநீதியானதுமென்றுநாம் வெளிப்படையாகச் சொல்லுகிறோம்; தமிழ் மாகாணங்களின் இணைப்பு அதிமுக்கியமானது.

அதுவுமல்லாமல் ஒப்பந்தத்தின் சில சிபார்சுகள் கண்டனத்துக்குரியவை. பந்தி (1.4) பொறிக்கிறதாவது; "தமிழ் பேசும் மககள் வடக்கிழ் மாகாணங்களைப் பரம்பரைபரம்பரையாக வசித்துவரும் பிரதேசங்கள் என்றுஏற்றுக்கொள்வதுமல்லாமல் இப்பிரதேசங்களில் அவர்கள் ஏனைய இனங்களுடன் இற்றைவரை வாழ்ந்துவந்துளளனர்'' ஏனைய இனங்களுடன் வாழ்ந்துவந்துள்வனர் என்பது கலப்புப் பிரதேசங்களைக் குறிக்குமுகமாக இந்தச் சொற்ருெடர் சேர்க்கப்பட்டுள்ளது என்று நாம் சந்தேகிக்கவேண்டியுள்ளது. இரு சமூகத்தினர் வாழ்ந்துவந்த பிரதேசம் என்றுகூறுவதுமல்லாமல், இப்பிரதேசங்களில சிங்களக்குடியேற்றமும் செய்யலாமென்பதைஇலங்கை அரசு காட்டுகிறது. இது உண்மையற்றது. யாழ்ப்பாணத்தில் 1947-ம் ஆண்டில் சுமார் இரண்டாயிரம் சிங்களவர்களே வாழ்ந்தனர். இதைக் கலப்புப் பிரதேசமென்று கூறமுடியாது. கிழக்கு மாகாணமும் தமிழ்பேசும் மக்களே வாழும் பிரதேசமாகவுள்ளது. பிற்காலத்தில் திட்டமிட்டு அரசு நடத்திய குடியேற்றங்கள் கணிப்புக்குப் புறம்பானவை. 1947க்குப் பின் செய்த குடியேற்றங்களை சனத்தொகை நிர்ணயத்துக்குக் கணித்தல் நியாயமாகாது.

வடகீழ் மாகாணங்களுக்கு வேண்டிய பாதுகாப்பை ஏற்படுத்த அவைகளின் உத்தேச "ஒரு தெரிவு செய்யபபட்ட மாகாண சபைக்கு'' இந்த ஒப்பந்தத்தால் அதிகாரமெதுவும் உண்டா? மாருக மத்திய அரசுக்குக் கூடுதலான அதிகாரத்தை வழங்குவதாகவுள்ளது. பந்தி 2.10 கூறுவதாவது: "வடகீழ்மாகாணங்களில் சமாதானத்தையும், சட்ட அமுலாக்கத்தையும் உண்டுபண்ண ஏனைய மாகாணங்களில் அமைந்துள்ள வழிவகைகளையும் சாதனங்களையும் இலங்கை அரசு மேற்கொள்ளும் '' இதனுலே உத்தேச தமிழ் மாகாண சபைக்கு உரிய அதிகாரமில்லையென்று கொள்ளவேண்டியிருக்கிறது. ஏனைய மாகாணங்களைப்போலவே இந்தமாகாணமும் சாதாரண ஒன்ருக மதிக்கப்படும் என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. தமிழ்மக்களுக்குரிய உரிமைகள் வழிவகைகள் ஏற்படுத்தாத படசத்தில் மீண்டும் தமிழ்ப் பிரச்னை கிளம்ப இடமுண்டு.

ஒப்பந்தத்தில் படைகள் முகாமகளுக்குத் திரும்புவது பற்றிப் பேசப்படுகிறதேயொழிய படைகளை வடக்கிலும் கிழக்கிலுமிருந்து வாபசாகிறது பற்றி ஒன்றுமில்லை. இவ்வளவு இரத்தம் சிந்தியும் உயிரழிவு நடந்தும் படைகள் தமிழ்ப் போராளிகளினுல் ஒப்படைக்கப்பட்டும், இன்னும் தான் தமிழர்களுக்கு உரிமைகள் நிராகரிப்பதாக அமைந்துள்ளது.

இந்தியாவிலும் திரு. ராஜீவ் காந்தியவர்களிலும் தமிழ்மக்களுக்குப் பூரண நம்பிக்கையுண்டு என்பதால் இதனை அமுலாக்குவதில் நாம் விழிப்பாக இருக்கவேண்டும். தமிழ்ப் பிரச்னை சம்பந்தமாக இந்தியாவின் பிரதிநிதியாக விளங்கும் திரு ஜே என். டிக்ஷித் அயராது உழைத்துவந்துள்ளார் அவருக்குத் தமிழ்மக்கள் என்றும் நன்றியறிதலாகவிருக்க வேண்டும் அவ்வப்போது தமிழர் அபிலாசைகளையும் இந்திய அரசின் பணிப்புரைகளையும் இலங்கை அரசுக்குத் திறமையுடன் எடுத்து விளக்கியுள்ளார்.

ஒப்பந்தத்தின் பின்னரும்------

# தமிழ் அகதிகள் பழைய இடத்திற்கு செல்ல முடியாத நிலை

[கே. கேசவநம்பி]

இந்திய இலங்கை ஒப்பந்தத்தையடுத்து வடபகுதியில் அமைதி நிலவிய போதிலும் சில பகுதிகளில் தமிழ் மக்கள் தமது இருப்பிடங்களுக்குமீண்டும் செல்லமுடியாமலுள்ளது. குறிப்பாக முல்லை மாவட்டத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு ஆகிய இடங்களிலுள்ள மக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்ல முடியால் உள்ளனர்.

கொக்கிளாயிலும் டொலர், கென்ற் பண்ணைகளிலும் இலங்கை ராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் முகாமிட்டுள்ளனர். இவர்கள் இப்பகுதிகளில் தமது இருப்பிடங்களை பார்க்கச் சென்ற மக்களை விரட்டியடித்ததாகபிரஜைகள்குழுக்களுக்கு புகார் செய்யப்படடுள்ளது.

இப்பகுகி மக்கள் அங்கு சென்று மீண்டும் குடியேறுவதற்கான வசதிகள் பல செய்ய வேண்டியுமுள்ளன. பாடசாலைகள், வைத்தியசாலைகள், கடைகள்மற்றும் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய சேவைகள் யாவும் செயலற்றுப் போயுள்ளன. இச்சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முல்லை மாவட்ட அரச அதிபர்விரைவில் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தார்.

இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தற்போது செம்மலை, அளம்பில், குமுழமுனை ஆகிய இடங்களில் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர். இவர்களுக்கு அரச நிவாரணங்கள் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருவதுடன் சர்வதேச சமூக சேவை ஸ்தாபனங்களும் உதவியளித்து வருகின்றன.

வவனியா, மன்ஞர் மாவட்டங்களில் பொதுவானஅமைதி நிலவுகின்றது. வவனியா மாவட்டத்தில் அநேகமான இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து சென்ற தமிழ் மக்கள் மீண்டும் அங்கு சென்று குடியேறி வருகின்றனர். இம்மாவட்டத்தில் வசித்து இடம் பெயர்ந்த சிங்களவர்களும் மீண்டும் தமது இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

### தடைமுகாம்களில்

இந்திய அமைதி காக்கும் படையினரின் வருகையையடுத்து ஆனையிறவுதடைமுகாம் கிளிநொச்சி, பரந்தன், ஒட்டுசுட்டான், வவனியா, மாங்குளம், ஓமந்தை ஆகிய ராணுவ முகாங்களிலிருந்து பெருந்தொகையான இலங்கைராணுவத்தினர் வாபஸ் பெறப்பட்டுள்ளனர். ஆனல் மன்ஞர் மாவட்டத்தில் பறையனுலங்குளம்,முருங்கன் உயிலங்குளம் தள்ளாடி,மன்ஞர் கோட்டை, இலங்கை வங்கிக் கட்டடக் கூட்டுத்தாபனம், தலைமன்ஞர் ஆகிய இடங்களில் முகாமிட்டிருக்கும் ராணுவத்தினர் தொடர்ந்தும் அங்கேயுள்ளனர்.

# கல்வி வளர்ச்சியை சகலரும் பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டும்

[அச்சுவேலி நிருபர்]

"யாழ் மாவட்டத்தின்கல்வி வளர்ச்சியில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட தாக்கத்தை நிவர்த்திசெய்து கல்வி வளர்ச்சியை பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள் முழுமையாக உழைக்கவேண்டும். அத்துடன் இந்த வருடத்தில் இழந்த பாடசாலை நாட்களையும், பூர்த்திசெய்யாத பாடத்திட்டததையும் வருடம் முடிவதற்கு முன்னர் பூரணப் படுத்தவேண்டும் ''

இவ்வாறு யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் கோப்பாய் கல்வி வட்டார பாடசாலை அதிபர்கள், கொத்தணி அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் கூறினுர்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஆ வ. தங்கராசா தலைமையில் நடந்த கூட்டத்தில், தொடர்ந்து ஜனுப் எம். எம். மன்சூர் உரையாற்றும்போது; "யாழ மாவட்டத்தின் கலவி வளர்ச்சியிலும் வரலாற்றிலும் அண்மைக்காலச் சம்பவங்கள் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. மாணவர்களின் பாடத்திட்டங்கள் உரியமுறையில் பூர்த்திசெயயப்படாத நிலை காணப்படுகின்றது உரிய முறையில் பாடசால நாட்கள் நடைபெறவில்லை. இவை பூர்த்தி செய்யப்படவேண்டும்.

கல்வி வளாச்சியில் ஏற்பட்ட தாக்கத்தை நீக்கி, பழைய நிலைக்கு கல்வியைக் கொண்டு வருவதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும்.

போர்க்காலநிலைமையில் எத்தகைய ஏற்பாடுகள் செய்யப்பட்டு பாதிப்புக்கள் நிவர்த்தி செய்யப்படுகின்றனவோ அதே போன்று நாம் கல்வி வளாச்சியிலும் இன்றைய நிலையில் கவனம் செலுத்தவேண்டும்.

அண்மைக்காலச் சம்பவங்களினுல் பாதிக்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்கள், மற்றும் வசதிகள் நிவர்த்திசெய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் அதுவரை நாம் பார்த்துக்கொண்டிராமல் சூழ்நிலக்கு ஏற்றவிதத்தில் மாணவர்களின் கல்வி நிலையை வளர்க்கவேண்டும்

நாம் கூடியளவு பாடுபட்டால் இழந்த கல்விப் பாதிப்புக்களைப் பூர்த்திசெய்துகொள்ளலாம். தற்போதைய சூழ்நிலையில் சேவை மனப்பாங்குடன் எல்லோரும் முழுமையாகச் செயற்படவேண்டும்.''

## இன்றைய பலன்

[9ம் பக்கத் தொடர்ச்சி]

பூமிப் பிணக்குகளால் கவலைகள் தோன்றும், தொழில்புரியும் இடத்தில் அவதானம் வேண்டும்.

தனுசு: குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம்பெறும் வெளியிடத்துச் செய்திக்கும் இடமுண்டு, உடல் நலமும்முன்னேற்றம் காணும்.

மகரம்: ஆணவப் போக்கினுல் அடிசறுக்கநேரும், குடும்பத்திலும் சிறு பூசலுக்கு இடமுண்டு. வயதுமுதிர்ந்த பெண் மூலம் அவப்பெயருக்கும் இடமுண்டு

கும்பம்: தன்மான வாழ்வுடன் தனமும் சேரும், தாயின் ஆதரவும் தவருது கிடைக்கும், முயற்சிசெய்ய முன்னேற்றமுண்டு

மீனம்: அறிவுப் பசிக்கு தாராளமாக விருந்து கிடைக்கும், ஆராய்ச்சிகளில் ஆர்வம் பிறக்கும், படித்தவர்களின் ஆதரவும் உண்டு.

திருமலை
வே. இரவீந்திரன்

## 10, 000 கிலோ மலத்தியன் அனுப்பப்பட்டது

(பண்டத்தரிப்பு நிரு)

யாழ் பிரதேச மலேரியா தடுப்பு இயக்கத்திற்கு கொழும்பிலுள்ள தலைமை அலுவலகம் பததாயிரம் கிலோ மலத்தியன் நுளம்புக்கொல்லி கிருமிநாசினி மருந்தை அண்மையில் அனுப்பிவைத்துள்ளது.

இதனையடுத்து யாழ்மாவட்டத்தில் மலேரியா பரவும் சாத்தியமுள்ள இடங்களுக்கு மலத்தியன் மருந்து தெளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

## குணமாகினர்

(கொழும்பு)

இலங்கைப் பாராளுமன்றில் கடந்த வாரம் இடம்பெற்ற கிறனேட் வீச்சுச் சம்பவத்தில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த யாழ். மாவட்ட அமைச்சர் யூ.பி. விஜயக்கோன், நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் எஸ் அலவெத்துவல, பாராளுமன்ற அலுவல், விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எம். டி பிரேமரத்ன ஆகியோர் குணமடைந்து ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினர்.

(ஊ)

## இடமாற்றம்

(10-ம்பக்கத் தொடர்ச்சி)

கைகளைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திஸநாயக்கா தனது அமைச்சு அதிகாரிகளை வேண்டியுள்ளார். (ஊ)

## அந்தியேஷ்டி, சபிண்டீகரண அழைப்பு



திரு. நாகமுத்தர் கோவிந்தர்

அன்னாரின் அந்தியேஷ்டி, சபிண்டீகரணக் கிரியைகள் 01-09-87 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் இவ் அழைப்பை ஏற்றுச் சமூகம்தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம். இவரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

செ. வரதராஜ மாஸ்டர்.

நிர்வேலி, கரந்தன். [எ-0768]

# அரசியல் கைதிகள் ஒருவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை'

## ஈரோஸ் தகவல்

[அலுவலக நிருபர்]

இந்திய இலங்கை ஒப்பந்தத்தினால் இப்போது சமாதானம் நிலவுவதாகப் பலர் நினைக்கிறார்கள் இது நிரந்தர சமாதானமல்ல என்பதனை நாங்கள் உணரவேண்டும்.

இவ்வாறு ஈழப்புரட்சி அமைப்பு யாழ். பிராந்தியப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

ஈழவர் முன்னணி நேற்று முன்தினம் நடத்திய ஊர்வல முடிவில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

திரு. பரா மேலும் பேசுகையில் கூறியதாவது; இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இன்று ஒரு மாதமாகிறது. எமது மக்கள் மத்தியில் அமைதி ஏற்பட்டுவிட்டதா? இல்லை. கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாகச் சிங்களக் குடியேற்றங்கள் இன்றும் நடைபெற்று வருகின்றது தமிழர்கள் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள். எல்லைப்புறங்களிலே வாழ்கின்ற எமது மக்கள் தொடர்ந்து துன்புறுத்தப்படுவார்களேயானால் இந்த ஒப்பந்தம் நீடிக்க மாட்டாது.

இந்த ஒப்பந்தத்தின் பின்னால் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இதுவரைக்கும் எந்த ஒரு அரசியல் கைதியும் விடுதலை செய்யப்படவில்லை.

வடமராட்சி 'லிபரேசன் ஒபரேச' னின் போது கைது செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்களை விடுதலை செய்துவிட்டு அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவதாகக் கூறுகிறார்கள்.

தமிழ்பேசும் மக்கள் நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்தநேரத்தில் ஒன்றுபட்டுப்போராட வேண்டிய விடுதலை அமைப்புகள் தமக்குள்ளே மீண்டும் முரண்பட்டுக்கொண்டிருப்பது மிகவும் ஆபத்தானது

தமிழ்மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கவேண்டியவர்கள் ஒற்றுமையின்றி தமக்குள்ளே ஆயுதரீதியில் மோதுவதானால் எதிர்காலம் என்னாவது.

எந்த ஒரு விடுதலை இயக்கமும் ஆயுதரீதியில் தமது பிரச்னைகளை அணுகாமல் அரசியல் ரீதியாகப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கவேண்டும்.

(ஓ)

## மயிலிட்டி பிரஜைகள் குழு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கடற்படையினரால் கடலில் பறித்தெடுக்கப்பட்ட இயந்திரங்கள், வள்ளங்கள், வலைகள் முதலியன திரும்ப பெறுவதற்கு மயிலிட்டி பிரஜைகள் குழுவினரிடம் ஆவணங்களை ஒப்படைத்த கடற்றொழிலாளர்களை நாளை மறுதினம் புதன்கிழமை காலை பத்துமணிக்கு தமது அலுவலகத்திற்கு வருகைதருமாறு மயிலிட்டி பிரஜைகள்குழு வேண்டியுள்ளது

மாதகல் தொடக்கம் தாளையடி, உடுத்துறை, ஆழியவளை; வரையிலுள்ள கடற்றொழிலாளர்களும் யாழ்ப்பாணத்திலுள்ள கடற்றொழிலாளர்களுக்கும் அவர்களது வள்ளங்கள், இயந்திரங்களைக் திருப்பிக் கொடுக்குமாறு கூட்டுப் படைத்தளபதி சிறில் ரணதுங்க இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என மேற்படி பிரஜைகள்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஓ)

## அந்தியேட்டி கிருத்தியம்

T.K. பொன்னுத்துரை [JP.]

T. K. பொன்னுத்துரை J. P. அவர்களின் அந்தியேட்டி கிருத்தியம் 31-8-87 திங்கட்கிழமை காலை கீரிமலை புண்ணியதீர்த்தத்தில் அஸ்தி கரைக்கப்பட்டு 28/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில்கிருத்தியங்கள் நண்பகல் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். (சி-0770)

மனைவி, மக்கள்.

## இராணுவ

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபைக்கு ஏற்பட்ட இச்சேதங்களினால் உப அலுவலகப் பகுதிகளில் சுகாதார வசதிகள், போக்குவரத்து வசதிகள், குடிநீர் விநியோகம், மின் விநியோகம் போன்ற அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பித்துள்ளன மேற்கூறிய சேதங்களுக்கான இழப்பீட்டுத் தொகையை வழங்குமாறு புனர்வாழ்வு அமைச்சிடம் யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை கோரியுள்ளது.

## இயந்திர

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புறப்பட்ட தணிகாசலம் என்பவருக்குச்சொந்தமான படகில் பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், குழந்தைகள் உட்பட 42பேர் ஏற்றிவரப்பட்டனர்.

இந்திய கடல்எல்லையிலேயே இயந்திரக்கோளாறு ஏற்பட்டதாகவும் தொடர்ந்து வீசி வந்த கடும்காற்றினாலும் கடல் கொந்தளிப்பினாலும் அப்படகுக்குள் தண்ணீர் வந்ததாகவும் உள்ளே இருந்தவர்கள் அல்லோல கல்லோலப்பட்டதுடன் சிலர் நீரை வெளியில் அள்ளி ஊற்றி படுக்கைவிரிப்புகளை பாய்போல் காற்றில் பிடித்துஅதன்மூலம்பலமணிநேரம் கழித்து நெடுந்தீவுபனங்காணி கடற்கரைவந்து சேர்ந்துள்ளனர்.

## இன்று யாழ்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தூதுக்குழுவொன்று இன்று யாழ் அரசாங்கஅதிபர் திரு வி எம் பஞ்சலிங்கத்தைச் சந்தித்து இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட யாழ் மாவட்டத்தைப் புனரமைப்பது தொடர்பாக கலந்துரையாடவுள்ளது

இதேவேளை வடக்கு கிழக்கு மாகாண பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழுவின் கூட்டமொன்று நேற்று யாழ் நகரில் இடம்பெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் பங்கு பற்றிய திருமலை, மட்டக்களப்பு முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகள் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த பிரதேசங்களில் துரிதகதியில் சிங்களக்குடியேற்றம் நடைபெறுவதாகவும் இராணுவ நடவடிக்கைகளால் அப்பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்த தமிழ்மக்கள் மீண்டும் அங்குசெல்ல முடியாதுள்ளனரெனவும் புகார் செய்துள்ளனர்.

மேலும் வடபகுதியைத் தவிர்ந்த ஏனைய தமிழ்ப் பகுதிகளில் இராணுவ ரோந்து நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் தெரிவித்துள்ளனர். அத்துடன் இந்திய-இலங்கை உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள; தமிழ் அரசியற் கைதிகள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

இதனையடுத்து அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகளையும், இந்திய - இலங்கை உடன்படிக்கை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லையென்பதையும் இன்று வரும் அமெரிக்க அதிகாரிகளுக்கு உணர்த்துவதற்கு கச்சேரி வாசலில் அமைதியான முறையில் மறிபற்போராட்டம் செய்வதெனக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

அமெரிக்க அதிகாரிகளின் அரசாங்க அதிபருடனான பேச்சுவார்த்தையின் போது, அவர்களைக் குழப்பாது சுலோகம் தாங்கியவாறு, அரசின் நடவடிக்கைகளை எடுத்துரைப்பதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மேலும் அரச அதிபர் அரசின் நடவடிக்கைகளுக்கான தனது எதிர்ப்பை அரசுக்கு எடுத்துரைக்க வேண்டுமெனக் கோருவதெனவுப் தீர்மானிக்கப்பட்டது.

## இலங்கை வங்கி

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிக்குமென யாழ். இலங்கை வங்கிக் கிளை பிரதம முகாமையாளரும், வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளருமான திரு எம். கனகரத்தினம் நேற்றுதெரிவித்தார்.

இப்பணமூல பரிமாற்ற நடவடிக்கைகள் தற்போது வரையறுக்கப்பட்ட அளவில் மட்டுமே இடம்பெறுமெனக் கூறிய அவர், பாதுகாப்பு, நடைமுறைச் சாத்தியங்கள் ஆகியவையின் முன்னேற்றத்தை அனுசரித்து படிப்படியாக அதிகரிக்கப்படுமெனக் கூறினார்.

வட பகுதியில் ஏற்பட்ட கொந்தளிப்புநிலை காரணமாக 1984 ஏப்ரல் 9ம் திகதி முதல் இந்த இலங்கை வங்கிக் கிளை குருநகர் இராணுவ முகாமிலும், பின் கோட்டை இராணுவ முகாமிலும் இயங்கி வந்தது.

தற்போதைய அமைதி சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இன்றுமுதல் பண பரிமாற்றத்தை ஆரம்பிக்கும் இவ்வங்கி காலை 9 மணிமுதல் 11 மணி வரையே சில நாட்கள்வரை மேற்கொள்ளுமென பிரதம முகாமையாளர் தெரிவித்தார். [கே]

## பருத்தித்துறையில் பொலிஸ் நிலையம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் பொலிஸ் நிலையமொன்று திறக்கப்பட்டுள்ளது.

சார்ஜன்ட் பி. சதாசிவம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் ஏழு தமிழ்ப் பொலிசார் மட்டும் இங்கு கடமையாற்றுகின்றனர்.

இப்பொலிஸ் நிலையம் திறக்கப்பட்டு மூன்று தினங்களுக்குள் 90க்கும் அதிகமான முறைப்பாடுகள் இங்கு பதியப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பகுதியில் இது மூன்றாவது பொலிஸ் நிலையமாகும் ஏற்கனவே மந்திகையிலும், வல்வெட்டித்துறையிலும் பொலிஸ் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

## ஒருவாரத்தில் இடைக்கால சபை நிர்வாகம்?

(கொழும்பு)

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கில் தற்காலிக இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெற்றுவருவதாகத் தெரியவருகிறது

இன்னும் ஒரு வார காலத்தில் இடைக்கால சபைகளின் நிர்வாகம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

இடைக்கால நிர்வாகம் மாநில சபைகளின் அதிகாரங்கள் குறித்துப் பேச்சு நடத்துவதற்காக த. வி கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு அ. அமிர்தலிங்கம், தலைவர் திரு. மு சிவசிதம்பரம் அரசியற் குழு உறுப்பினர் திரு. இரா. சம்பந்தன் ஆகியோர் நேற்று சென்னையிலிருந்து புதுடில்லி சென்றுள்ளனர்.

இந்த இடைக்கால நிர்வாகத்தில் பதின்மூன்று அங்கத்தவர்களை நியமிப்பதென தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

(ஓ)

## கூடுதல் தமிழ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டு மார்கழி மாதத்திலிருந்து இப்புதிய நடைமுறை அமுலுக்கு வரவுள்ளது. எனவும் தெரியவருகிறது.

அத்துடன் 1988ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து வடக்கு, கிழக்கில் தற்போது இயங்கும் பொலிஸ் நிலையங்களுடன் மேலதிக பொலிஸ் நிலையங்களும் திறக்கப்படவுள்ளன. என்று பாதுகாப்புத்துறைவட்டாரங்கள் தெரிவித்தன.

## சந்நிதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுமுகசாமிஐயர் ஆரம்பித்து வைத்தார்.

இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த இந்த ஆலய சுற்றுடலை யாழ் அரசாங்கஅதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் அண்மையுல் சென்று பார்வையிட்டார்

ஆலயத்தைபுனர்நிர்மாணம் செய்வதற்கு ஆறுபேர் கொண்டகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் திருவாளர்கள் பொ. பாலேந்திரா ஐயர், வ. சிவானந்தஐயர், க. உலககுருநாத ஐயர், செ. ஜெயவீரராசா ஐயர், ஆ. சிவசண்முகஐயர் வி இராசேந்திர ஐயர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

சந்நிதி முருகன் ஆலயபுனருத்தாரணவேலைகளுக்கு உதவி செய்யவிரும்புவோர் இக்குழுவினருடன் மாத்திரம் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [வா]

எமது நேற்றைய வெளியீடுகள்

(1) ★ சிரஞ்சீவி ★ ராதிகா ★ ராஜேஷ் நடித்த S. A. சந்திரசேகரின் "கடமை வீரன் கந்தசாமி"

(-) ★ சேகர்பாபு ★ நளினி ★ கவுண்டமணி "ஜாதிப்பூக்கள்"

எமது அடுத்த வெளியீடுகள்

★ கிருஷ்ணன் வந்தான்

★ கொடியவன்

★ ஜல்லிக்கட்டு

★ புலி வளர்த்த பிள்ளை

குணம் வீடியோ சென்ரர், 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23665

(எ 2142)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
திங்ககிட்ழமை 31-8-87

## கடற்படையினர் கைப்பற்றிய உடைமைகள் மீளபெற்றுத்தரும்படி தாயகம் திரும்பிய அகதிகள் அரச அதிபரிடம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்படையினர் தம்மிடமிருந்து கைப்பற்றிய பொருட்களை மீண்டும்தமக்குப் பெற்றுத்தருவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று அண்மையில் இந்தியாவிலிருந்து நாடுதிரும்பியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அரச அதிபரிடம் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

இந்திய-இலங்கை சமாதான உடன்பாட்டைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து தமது சொந்தஇடங்களுக்குத் திரும்பிய அகதிகளின் ஒரு படகுகள் இலங்கை கடற்படையினரால கைப்பற்றப்பட்டு அதில் வந்தஅகதிகளின் உடைமைகள் மேற்படி படையினரால் பறிமுதல்செய்யப்பட்டது. தமது உடைமைகளை இழந்த அந்த அகதிகள் யாழ் அரச அதிபரிடம் கையளித்துள்ள மகஜர் ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தமகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இம்மாதம் 21ம் திகதி வேதாரண்யம் சுங்க இலாகா அதிகாரிகள் முன்னிலையில் அவர்களின் சம்மதத்துடன் பிற்பகல் 5.00 மணிக்கு வேதாரண்யத்திலிருந்து எமது கடற்பயணம் ஆரம்பித்தது. அன்றிரவு சுமார் 11-30 மணியளவில் மாதகல் கரையை அண்மித்துவிட்ட எங்கள் படகை இலங்கைக் கடற்படையினர் வழிமறித்து தங்களைப் பின்தொடருமாறு எங்கள் படகைப் பணித்தார்கள். மாதகல் கரையிலிருந்து காங்கேசன்துறைக் கரைவரை கடலில் அவர்களை எங்கள் படகு பின்தொடர்ந்தது. காங்கேசன்துறையில் அவர்களுடைய பெரிய கடற்படைக் கப்பல் ஒன்று கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது அதில் எங்கள் எல்லோரையும் ஏற்றினார்கள். நாங்கள்வந்த படகையும் அந்தக் கப்பலுடன் கட்டினார்கள். நாங்கள் படகுகளுடன் இந்தியாவிலிருந்து கொண்டுவந்த பொருட்களையும் அந்தப் பெரிய கப்பலில் ஏற்றச் சொன்னார்கள். எல்லாம் ஏற்றப்பட்ட பின்னர் எங்கள் எல்லோருடைய பெயர், முகவரிகளையும் குறித்துக் கொண்டார்கள். அதன்பின் எங்களுடன் கொண்டு வந்த பொருட்களைச் சோதித்தார்கள் பாவிப்புப் பொருட்கள் என்று கூறி ஒரு சில பொருட்களை (இதில் புடவை வகை, சில்வர் வகைகள் அடங்கும்) மட்டுமே எங்களிடம் திருப்பித் தந்தார்கள். மற்றைய பொருட்கள் அனைத்தையும் அவர்கள் பறிமுதல்செய்து விட்டார்கள். எங்களிடமிருந்து பறித்த அத்தனை பொருட்களையும் காங்கேசன்துறை சுங்க இலாகாவினரிடம் தாங்கள் ஒப்படைப்போம் என்றும், சுங்க இலாகாவினரிடமிருந்து எமது பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாமென்றும் கடற்படையினர் கூறினர்.

22ந் திகதி அதிகாலையில் இன்னுமொரு படகில் வந்தவர்களையும் எங்களைப் பிடித்ததைப் போலவே பிடித்து அதே கப்பலுக்குக் கொண்டுவந்தார்கள். அந்தப்படகில் மொத்தம் 24 பேர் இருந்தனர். இதில் பெண்களும் வந்திருந்தனர். அவர்களுடைய பொருட்களையும் முன்போலவே பறிமுதல் செய்தனர். இப்பொருட்கள் இதுவரை எம்மிடம் கையளிக்கப்படவில்லை.

கடற்படையினர் எங்களில் பலரை மிகவும் கீழ்த்தரமாகவே நடத்தினார்கள். கப்பலின் மலசல கூடங்களை கழுவுமாறு எங்களைவற்புறுத்தினார்கள். இந்தியாவுக்கு அகதிகளாக வந்தவர்களை கௌரவப் பிரஜைகளாகவே இலங்கை செல்ல ஏற்பாடு செய்வேன் என்ற இந்தியப் பிரதமரின் வாக்குறுதி இங்கு காப்பாற்றுமல் போனதையிட்டும், எமக்கு ஏற்பட்ட அலைச்சலையும், பொருள்இழப்புகளையும் நினைத்தும் நாம் எல்லோரும் வேதனைப்படுகிறோம் இந்திய இலங்கை ஒப்பந்தப்பட கடமை புரியும் சமாதானப்படையினர் எங்கள்விடயத்தில் பொதுவாகப் பாராமுகமாகவே இருந்து விட்டார்கள்

அகதிகள் தாயகம் திரும்பவென இந்திய அரசினால் விசேட ஏற்பாடுகள் எதுவும் இதுவரை செய்யப்படவில்லை இந்தநிலையில் தாயகம் திரும்பும் இன்னும் ஏராளமானோர் தொடர்ந்து எமக்கேற்பட்டது போன்ற அவலநிலையைச் சந்திக்கப் போகிறார்கள்.

எனவே இதற்கொருமுடிவை உடனடியாகவே காணவேண்டும். இந்தப் பிரச்சினையை இலங்கையிலும் இந்தியாவிலும் அம்பலப்படுத்தி எம்மைப் போன்ற அப்பாவி மக்களை அவலநிலையிலிருந்துகாப்பாற்ற வேண்டும். [ரா]

## உலக வங்கி கூட்டம்

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகளினால் இலங்கையில் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மறு சீரமைப்பு பணிக்கு நிதியுதவி வழங்குவது குறித்து உலக வங்கி வாஷிங்டனில் கூட்டமொன்றை நடத்தவுள்ளது

இந்திய இலங்கை உடன்பாட்டைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ஒ)

## சிதம்பராக் கல்லூரியில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையம் மீண்டும் இயங்க ஆரம்பமாகியுள்ளது

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் ரசாயன ஆய்வு கூட அறை ஒன்றில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையம் ஐந்து பொலிஸ் கான்ஸ்டபிள்களுடனும், ஒரு பொலிஸ் அதிகாரியுடனும் இயங்கி வருகின்றது

இப்பகுதி மக்களால் இதுவரை நாளும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்த சகல முறைப்பாடுகளும் இனிமேல் இங்கேயே ஏற்றுக்கொள்ளப்படும்

சிதம்பராக் கல்லூரியின் வளவுக்குள் இராணுவத்தினரால் புதைத்து வைக்கப்பட்ட பொறி, கண்ணி வெடிகள் பல அகற்றப்பட வேண்டியுள்ளதாலும், கல்லூரி கட்டிடங்கள் தளபாடங்கள் யாவும் சேதமாக்கப்பட்டும் அகற்றப்பட்டுமுள்ளதால் கல்லூரி இயங்க முடியாத நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## கண்டன ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

கொலை, கொள்ளை மற்றும் நெருக்கடி நிலைகளைக்கண்டித்து நேற்று மாபெரும் கண்டன ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

நிலாவரைச் சந்தியில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம், புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, வழியாக பலாலி இராணுவ முகாமைச் சென்றடைந்தது. அங்கு இந்திய அமைதிகாக்கும் படை உயரகாரியிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டதைத தொடர்ந்து உங்கள் கோரிக்கைக்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அந்த அதிகாரி எழுத்து மூலம் உறுதியளித்துளளார்

இவ்வூர்வலத்தில் வலிகாமம் கிழக்கு பகுதி மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். (வா)

## பாடசாலை மீளக்கையளிப்பு

[பருத்தித்துறை]

இராணுவ முகாமாகஇயங்கி வந்த புலோலிமெதடிஸ்மிஷன் [மந்திகை] தமிழ்கலவன் பாடசாலை இராணுவத்தினரால் பாடசாலை நிர்வாகத்திடம் மீளக்கையளிக்கப்பட்டதை யடுத்து கடந்த 27ம் திகதி இப்பாடசாலை ஆரம்பமானது

இப்பாடசாலைக் கட்டிடங்கள் ஏற்கனவே குண்டுவீச்சிற்கு இலக்காகி சேதடைபட்டிருந்தது பின்னர் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இதனை முகாமாக்கியிருந்தனர். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையடுத்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இப்பாடசாலைக் கட்டிடங்களை விட்டுவெளியேறியதும் புலோலிக்குவந்த இந்திய அமைதிப்படையினர் அங்கு முகாம் அமைத்திருந்தனர் தற்போது இந்திய அமைதிப் படையினரான இராணுவத்தினரால் பாடசாலை பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

## உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு அனுப்பப்படும் கடிதங்களை பிரித்துப் படிக்கும் கும்பல் கைது

[கொழும்பு]

உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு அனுப்பப்படும் கடிதங்களை உடைத்துப்பார்க்கும் கோஷ்டி ஒன்றின் நடவடிக்கைகளை தங்காலைப் பொலிஸார் முறியடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கோஷ்டியில் தடைசெய்யப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த உப தபால் அதிபர் ஒருவரும் நான்கு தபால் ஊழியர்களும் இந்த சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாகப் புலன்விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை தடைசெய்யப்பட்ட இயக்கமொன்றின் மாவட்ட அமைப்பாளர் ஒருவரும் கைதுசெய்யப்படுள்ளார். பல்லேகமவைச் சேர்ந்த இவரை விசாரணைக்குட்படுத்தியதைத் தொடர்ந்து தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்குச் சொந்தமான சஞ்சிகைகளும், அங்கத்தவர் படடியல், சுவரொட்டிகளுடனை இரண்டு பொலிஸ் நிலயத்தை தாக்குவது சம்பந்தமான கடிதம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## மிளகாய் விலை அதிகரிப்பு

(பலாலி)

யாழ்ப்பாணத்தில் மிளகாயின் விலை பலமடங்காக அதிகரித்துள்ளது. ஒருகிலோ மிளகாய் 55 ரூபா முதல் 65 ரூபா வரை விறகப்படுகிறது

கூட்டுறவு சங்கங்களிலும் விற்பனை செய்யப்படும் சீனி மிளகாய் 28 ரூபாவாக விற்கப் படுகிறபொழுதிலும் சகல மக்களுக்கும் கிடைக்கக் கூடிய முறையில் பகிர்ந்து அளிக்கப் படவிலலையெனக் கூறப்படுகிறது.

## வழமைபோல் அலுவல்கள்

(சுண்டிக்குளி)

சுண்டிக்குளி தபாலகத்தின் சகல கருமபீடங்களும்மீண்டும் திறககட பட்டுள்ளன

இத் தபாலகத்தில் இரு தடவைகள்அடுத்தடுத்துகொள்ளைகள் இடம்பெற்றதைத் தொடர்த்து பாதுகாபபுக்கருதி சகல கருமபீடங்களும் மூடப்பட்டு யன்னல் வழியாகவே சகல அலுவல்களும் நடைபெற்று வந்தன.

தற்பொழுது குடாநாட்டில் ஏற்பட்ட சுமுகமான சூழ்நிலையைத் தொடர்ந்து மீண்டும் சகல கருமபீடங்களும் திறக்கப்பட்டு வழமையானஅலுவல்கள் நடைபெறுகின்றன.

## தேசிய இளைஞர் சேவைகள் மன்ற குழு யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் நாயகம் திரு. சரித்தரத்வத்த தலைமையிலான உயர் அதிகாரிகள் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் விஜயம செய்யவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் சேதமுற்ற கட்டிடங்களையும், பாதிப்புற்ற இடங்களையும் பார்வையிடவுள்ள இக்குழு வடமராட்சியையும் பார்வையிடும்.

பாதிப்புற்ற பகுதிகளிலுள்ள மக்களுக்கு இளைஞர்கழகங்களூடாக புனர்வாழ்வு நடவடிக்கையை ஏற்படுத்தும் நோக்குடனேயே திரு.சரித்ரத்வத்த யாழ்ப்பாணம் வருவதாக தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ)

## யாழ் வரை ரயில் வருகிறது

(யாழ்ப்பாணம்)

வடபகுதக்கான ரயில்சேவை இன்று யாழ்ப்பாணம் வரை நீடிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 5 45 மணிக்கு கொழும்பில் இருந்து புறப்பட்டுவரும் யாழ்தேவி புகையிரதம் நண்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடையுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீன்பிடி பாதிப்பு

(நெடுந்தீவு]

இந்திய இழுவலை மீன்பிடிப் படகுகள் நெடுந்தீவு, நயினதீவு கடல் எல்லைவரை மீன் பிடிக்க வருவதால் இப்பகுதிகளில் சிறுதொழில் செய்யும் இலங்கை மீனவர்கள் பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன் இந்திய இழுவலைப்படகு சிறுதொழில் செய்வோரது வலைகளை இழுத்து அல்லது வெட்டிச்சென்றுள்ளதாகவும் நெடுந்தீவு பிரஜைகள் குழுச்செயலாளர் புலவர் ஏ டபிள்யூ அரியநாயகத்திடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

## இலங்கை-இந்திய

[1 பக்கத் தொடர்ச்சி]

ளின் அபிவிருத்திக்கென அரசு திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

அத்துடன் மன்னார், முல்லைத்தீவு வவனியா பகுதிகளின் கிராம வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளது.

மட்டக்களப்பையும், அக்கரைப்பற்றையும் இணைக்கும் 50 கிலோ மீற்றர் புகையிரதப் பாதை ஒன்றையும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அமைச்சர் இராசதுரை மேலும் கூறினார் [வா]

## பருத்தித்துறை கிராமசேவையளார்கள் இடமாற்றம், நியமன விபரம்

[வல்வெட்டித்துறை]

செப்டம்பர் மாதம் முதலாம் திகதி முதல் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமசேவையாளரின் இடமாற்றம், புதிய கிராமசேவையாளர் நியமனம் அவர்களின் பிரிவுகளும் கிராம சேவையாளர்களின் விபரமும் பின்வருமாறு:

திருவாளர்கள் செ. ஜெகந்நாதன்-தொண்டமானுறு, வி. இராசேந்திரம் - கெருடாவில் வடக்கு, சி. சிவபாலசிங்கம் - கெருடாவில் தெற்கு, து. கணபதிப்பிள்ளை - வல்வெட்டித்துறை தெற்கு, சோ. சிவராசன் - வல்வெட்டித்துறை வடக்கு, வி. வன்னிமரம் - பொலிகண்டி மேற்கு, வி.ஜெயவீரசிங்கம் - பொலிகண்டி கிழக்கு, ஜே என். பி பாக்கியராஜா - வல்லிபுரம், எல்.ஜெகதீஸ்வரன் - துன்னாலை வடக்கு, க. அருளானந்தம் - அல்வாய் மேற்கு, பொ. நடராசா - அல்வாய் வடக்கு, த. நந்தகுமார்-பருத்தித்துறை. த தர்மதாஸ்-பருத்தித்துறை கிழக்கு, வி சேதுநாயகம்-புலோலி கிழக்கு.க.வேலாயுதபிள்ளை - புலோலி தெற்கு, சி ஞானச்சந்திரன்-மந்திகை, எஸ். நடராசபிள்ளை- புலோலி மேற்கு ஜே. ரி. அந்தோனி-தும்பளை, ஆ சிவசண்முகம்-கற்கோவளம், க யோகேந்திரநாதன் - குடத்தனையூர், அ. மகாலிங்கம் - அம்பன, சி சிவலிங்கம்-குடத்தனை. இ புலேந்திரன்- நாகர்கோவில் வடக்கு, சோ வசந்தகுமார் - நாகர் கோவில் தெற்கு, பா. ச. வெண்டகோன் - செம்பியன் பற்று, மா. யோசெவ்-மருதங்கேணி, கே கறுவல்தம்பி-உடுத்துறை, பா. இராசேந்திரம்-முள்ளியான், ந. பழனிநாதன்-போக்கறுப்பு, தி சிவபாத விருதயர்-சுண்டங்குளம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் திகதி அசசிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.